REGISTERED No. M. 6165. அணா. 2

50

50. 3-54

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுன் 1954.

JUL 195


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| நமது வெற்றிப் பெருநாள் | .... .... | 1 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் | (ரஹ்மத் பாகவி) | 5 |
| கோவளம் தர்க்காவில் கண்ட காட்சி (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்) | .... .... | 8 |
| இரத்தச் சின்னம் | (தொடர் கதை) ... | 16 |
| ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா சரித்திரச் சுருக்கம் (அய்யம்பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | | 22 |
| தர்மம் (எம். கே. எ. எஸ். அஹ்மத்மீரு, சிருடையபுரம்) | | 29 |
| ... மன்றம் (... கே. எச். அப்துல் கரீம் நூரிய்யி) | | 31 |


...ஸ்லாம் ஆபீஸ் :
...0, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7 ... M24 FI
N54
187031

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

இது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லா ஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்புர் றப்பானீ வல்கவ்துஸ் ஸமதானீ ஸையிதினா முஹியித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறாமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமுமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கவ்துல் அஃலம்" விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜீ எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்5.

# பத்ஹுல் இஸ்லாம்.

ஜுன்—1954.

ஹிஜ்ரி 1373—ஷவ்வால்.


## நமது வெற்றிப் பெருநாள்!

இந்தப் புனித றமலான் மாதத்தின் முப்பது நோன்புகளையும் இனிது நோற்ற பக்த சிகாமணிகளாகிய மூமின்களுக்கு, அல்லாஹ்ற வுடைய நற்கிருபையும் சுகமும் சாந்தியும் சாத்வித வாழ்வும் உண்டாவதாக. முபாரக்! முபாரக்!! ஈது முபாரக்!!!

முஸ்லிம்கள் அல்லாஹ்றவின் கட்டளைகளை யேற்று மனமுவந்து நோற்ற முப்பது நோன்புகளும் நல்ல முறையில் முடிவடைந்த சந்தோஷத்தைக் கொண்டாடுவது, நோன்புப் பெருநாளின் முக்கிய தத்துவங்களில் ஒன்றாகும்.

உலக வாழ்வில் மாந்தராகிய நாம், முயன்று ஒரு பெரிய காரியத்தை சாதித்து முடிப்போமாயின், அதைக் கொண்டாடுவதற்கு ஒரு நந்நாளைக் குறிப்பிட்டு அதைத் திருநாளாகக் கொண்டாடுகிறோமல்லவா? அதே முறையில், ஆத்ம நலத்துக்காகவும், தேக சுகத்துக்காகவும், சமுதாய பலத்துக்காகவும் நாம் அனுஷ்டித்த நோன்பு என்னும் விரதம் இனிது நிறைவேறி முடிவடைந்ததற்கு, ஒருநாளை நாம் 'ஈதுல் பித்ர்' என்ற பெயரால் கொண்டாடுகிறோம். சீரும் சிறப்பும் புனிதமும் மிக்க ரமலான் மாதம் வந்தபோது, மக்ரிப் நோத்தில் முதல் நாள் இளம் பிறையைக் கண்டதும் முஸ்லிம்களெல்லாம் மனம் மகிழ்ந்து உள்ளம் பூரித்துப் பெருமிதம் கொண்டனர். அத்துடன், பர்லான இஷாத் தொழுகையுடன் சுன்னத்-நபிலான தராவீஹ் என்னும் விசேஷத் தொழுகையும் தொழுதனர். 'ஹாபிலுல் குர்ஆன்' என்னும்

திருக் குர்ஆன் பாராயணர்களால் அத்தராவீஹில் ஓதப்படும் குர்ஆன் திருமறை வாசகத்தை முழுதும் கேட்டு இன்புற்று பயன் அடைந்தனர்.

ரமலான் மாதம் முழுதும் 30 நாளும், ஆண்டவனுக்காக வென்று அனுதினமும் அந்திகாலந் தொட்டு சந்திகாலம் வரை ஏதும் உண்ணாமலும் பருகாமலும், இச்சைகள் கொள்ளாமலும், பொய் வஞ்சனைகள் புரியாமலும் இருந்து 'ஸவ்மு' என்னும் புனித நோன்பு நோற்றனர். இத்தகைய வணக்க முறையில் முயற்சித்து வந்த புனிதகாரியம் வெற்றியுடன் பூர்த்தியடைந்ததற்காக, இறுதியில் ஷவ்வால் மாதம் முதல் நாளை ஈதுல் பித்ர் என்னும் புனிதப் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர். எனவே அல்லாஹ்விடம் பயமும் பக்தியும் கொண்டு, தராவீஹ் தொழுது, நோன்பு நோற்ற புண்ணியவான்களுக்கு ஈது முபாரக் உண்டாவதாக.

## பித்ரா-தானம்

ஈதுல் பித்ர் பெருநாள், முஸ்லிம்களாகிய எல்லோருக்கும் பொதுவான நந்நாளாகும். வசதியுள்ள தனவந்தர்க்கு மட்டுமல்லாமல், ஏழை எளியோருக்கும் அது சந்தோஷ நாளேயாகும். பரஸ்பரம் முஸ்லிம்கள் ஒருவர்க்கொருவர் உதவியும் சகாயமும் புரியவேண்டு மென்ற தத்துவம் ஈதுப் பெருநாளில் அடங்கி யிருக்கிறது. எப்படி யெனில்:—

ஜக்காத்கொடுக்க கடமை பட்டுள்ள, வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் பித்ராத்தானம் கொடுக்க வேண்டும். அதாவது, ஒவ்வொருவரும் ஈதுத் தொழுகைக்குப் போவதற்குமுன், தனக்காகவும் பருவமடையாத தனது சிறு பிள்ளைகளுக்காகவும் தன் பணியாளர்களுக்காகவும் ஒரு குறிப்பிட்ட அளவு தானதர்மம் செய்து, ஏழை எளிய சகோதரர்களின் கஷ்டத்தையும் போக்க வேண்டும்.

ஸத்கா பித்ரா என்பது அரை மரைக்கால் அளவு கோதுமை, அல்லது ஒரு மரக்கால் அளவு இதர தானியம் 'பித்ரா கொடுக்கிறேன்' என்ற நிய்யத்துடன் ஒரு ஏழைக்கே தானம் கொடுக்க வேண்டும். நம் நாட்டில் வழங்கும் அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்களையும், மேற்சொன்ன விதான அளவுக்குக் கொடுக்கலாம். ஒரு மரக்கால் அளவு என்றால் 270 தோலா எடையுள்ள தானியம் என்று அரபு நாட்டில் கணக்கிடப் படுகிறது. சுமார் இரண்டேகால் வீசையுள்ள தானியமாகும். நம் நாட்டில் தானியத்தை எடைபோட்டுக் கணிப்பதில்லை யாதலால், சுமார் ஒன்றரைப்படி தானியம் அளந்துக் கொடுக்கலாம். அல்லது அதன் முழுக் கிரயத்தையும் ஸத்காவாக கொடுக்கலாம்.

187031

ஸத்கா பித்ரா 'இவ்வளவு' என்பதில் அபிப்பிராய பேதத்துக்கு இடமிருப்பதால், நிதானமாக சற்று அதிகமாகவே தானம் கொடுத்து விடுவது மிகச் சிரேஷ்டம்.

ஜக்காத் கொடுக்க கடமைப்பட்டவர்தான் ஸத்கா பித்ரா கொடுக்கவும் கடமைப் பட்டிருக்கிறார்கள். சொந்த வீடு வாசல் இல்லாத, கடன் தொல்லையுள்ள, வசதி யில்லாத எளியவர்கள், சொற்ப வருமானம் உள்ளவர்கள் ஸத்காபித்ரா கொடுக்க வேண்டிய அவசியமில்லை. பிரியத்தினாலும், பக்தியினாலும், பரோபகார சிந்தையினாலும் ஒரு ஏழை தன்னுடைய சௌகரியத்தை மட்டுப் படுத்திக் கொண்டு ஸத்கா பித்ரா கொடுத்தால் அது நிறைவேறும். அதற்கு அதிகமான விசேஷ புண்ணியம் உண்டு.

## ஈதுத் தொழுகை

பெருநாளின் போது, எல்லா முஸ்லிம்களும் ஸ்நானம் செய்து, நல்லுடை யுடுத்தி, நறுமணம் பூசி, அனைவரும் கூடி, வழி நெடுக தக்பீர் எனும் அல்லாஹூ அக்பரை முழங்கிக் கொண்டு ஈதுகாஹூக்குப் போகிறார்கள். ஊர் மஹல்லா பள்ளிவாசலில் இடம் போதாதென்பதற்காகவும், எல்லா முஸ்லிம்களும் ஒரு விசாலத் திடலான மைதானில் கூடி ஒற்றுமையா யிருந்து வணக்கம் செலுத்தினால், பார்க்கும் பிற சமூகத்தார்களும் அதைக் கண்ணியமாய் மதிப்பார்கள் என்பதற்காகவுமே ஈதுகாஹ்வில் பெருநாள் தொழுகையை நிறைவேற்ற வேண்டு மென்று வழக்க மிருந்து வருகிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பட்டணங்களில் காலி மைதானங்கள் இருப்பதில்லை யாதலால், நகர் மஹல்லா பள்ளி வாசல்களிலும், ஜூம்ஆ மஸ்ஜிதுகளிலுமே ஈதுத் தொழுகையையும் தொழுவது வழக்கம்.

ஈதுப் பெருநாளில் நாம் மட்டும் சந்தோஷமாய் இருந்து விடாமல் ஏழை எளியோர்களையும் கவனிக்க வேண்டும். உணவும் உடையும் அவர்கட்கும் கிடைக்க வசதி செய்ய வேண்டும். உற்றார் உறவினர்களையும் சம்ரக்ஷிக்க வேண்டும். இதுவே ஈதுப் பெருநாள் நமக்குப் போதிக்கும் விழுமிய தத்துவமாகும்.

இந்த ரீதியில், பெருநாளைக் கொண்டாடுபவர்க்குத் தான் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தும் பரக்கத்தும் உண்டாகும். ரமலான் மாதம் முழுதும் நோன்பு நோற்காமலும், தராவீஹ் தொழாமலும், திருக்குர்ஆன் பாராயணம் செய்யாமலும், விசேஷ வணக்க ஒழுக்கங்களில் ஈடுபடாமலு மிருந்து விட்டு, கடைசியில் ஈதுப் பெருநாளில் மட்டும் சந்தோஷங் கொண்டாடுவோர் எத்தனையோ பேர்! இவர்கள் எப்படிப் பட்டவர்களெனில், பாட்டாளி மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் போது எங்கேயோ ஒளிந்து இருந்து, உணவு அருந்தி சுகம் பெறும் போது

மட்டும் கும்பலில் வந்து சேர்ந்து கொள்ளுகிறார்களே அப்படிப்பட்ட சுயநலமிகளாவர்.

"புத்தாடை மட்டும் உடுத்தவர்களுக் கல்ல ஈதுப் பெருநாள்; ஆண்டவன் கட்டளைக்குப் பணிந்து, தியாகம் அனுஷ்டித்தவர்களுக்கு மட்டுமே ஈதுப் பெருநாள்" என்பது ஓர் அரபு முதுமொழி

எனவே, எல்லாம் வல்ல இறைவன் நம் மெல்லோருக்கும் இகத்திலும் பரத்திலும் நன்மை தந்தருள்வானாக. நேர்மையான விதத்தில் ஈதுப் பெருநாள் கொண்டாடும் புண்ணிய சிலர்களின் ஜமாஅத்தில் நம்மை சேர்த்து வைப்பானாக ஆமீன்.

ஈது முபாரக்!

---


## ஹஸரத் பிலால் (ரலி) ஜீவிய சரித்திரம்

ஹஸரத் பிலால் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்தில் பாங்கு சொல்லும் முஅத்தின் வேலையில் ஈடுபட்டிருந்த சங்கதி சாதாரணமாய் எல்லா முஸ்லிம்களுக்கும் தெரிந்துள்ளதே. ஆனால் ஒரு ஹபஷ் தேச நீக்ரோ அடிமை, இஸ்லாம் மதக் கட்டளைகளுக் கிணங்க அல்லா றஸூலுக்கு வழிபட்டு நடந்து கொண்டதி னின்றும் அவருடைய பதவியும் அந்தஸ்தும் எத்தகைய மேன்பாட்டை யடைந்தன வென்பதை அறிந்தோர் மிகவும் சிலரேயாவர்.

இவ்விபரங்களை யெல்லாம் இவ்வரிய சரித்திரத்தில் மிக விபரமாய் விளக்கிக் காட்டி எழுதலானோம்.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5

# திருக் குர் ஆன் :: :: :: :: சாரசங்கிரஹம்.

## அல்லாஹ்வைப் பற்றிய ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### இறைவன் அடியார்க்கே சுவர்க்க மாளிகை.

யார் தன் இரக்ஷகனுக்குப் பயந்து ஒழுகுகிறார்களோ அவர்களுக்கே சுவர்க்கத்தில் உப்பரிகைகள் உண்டு. அந்த மாளிகைக்கு மேலேயும் மாளிகைகள் உண்டு. அதன் அடித்தளத்திலே குளிர்ந்த நீர் ஊற்றுகள் செல்லும். இந்த சுகானுபவச் செய்தி அன்னோர்க்கு ஆண்டவன் அளிக்கும் வாக்குறுதியாகும். ஆண்டவன் ஒரு போதும் தன் வாக்குறுதியில் பிறழ்வதே யில்லை. (ஸூரா : ஸுமர்; ருகூ : 2)

### இறைவனைத் தவிர்த்து நல்வழி காட்டி இல்லை.

அல்லாஹ், தன் அடியார்களுக்குப் போதுமானவனாக இல்லையா ? ஏ நபியே, அந்த (மூர்க்க) ஜனங்கள், ஏக இறைவனைத் தவிர்த்து (வேறு தெய்வப்) பெயர்களைக் கொண்டு உம்மை மிரட்டுகிறார்களல்லவா? அவர்களுக்கு (உண்மை) என்ன தெரியும் ? யாரை வழி கெட்டுப் போகும்படி ஆண்டவன் விட்டு விடுகின்றானோ, அவர்களை நல் வழிக்குக் கொண்டுவர யாராலும் முடியாது. யாரை ஆண்டவன் சன்மார்க்கத்தில் அழைத் தேகுகிறானோ அவர்களை, வழி கெடுத்துப் போட வேறு எவராலும் முடியாது. இங்ஙனம் அல்லாஹ், சகல சக்திகளை மிகைத்தவனாகவும், பதிலுக்குப் பதில் செய்பவனாகவும் இல்லையா ? (ஸூரா : ஸுமர் ; ருகூ : 4)

### இறைவனின் இன்னருளை இழந்து விடாதீர்.

ஏ நபியே, ஜனங்களுக்கு (இங்ஙனம்) எனது நன்மொழி கூறுவீராக : "ஏ என் நல் அடியார்களே, உங்களில் எவர், (பாபஞ் செய்து) தன் ஆத்மாவுக்கு அதிக்ரமம் புரிந்து கொண்டனரோ அவர், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை (இன்னருளை) விட்டு மனம் சோர்ந்து விட வேண்டாம். ஆண்டவன் இஷ்டப்படுவானானால், உங்கள் பாபங்கள் அனைத்தையும் அவன் மன்னித்து விடுவான். உண்மையாகவே அவன் பிறர் பாபங்களை மன்னிக்கும் தன்மையுடையவனாகவும் அன்பு மிக்கவனாகவுமே இருக்கின்றான். முந்துங்கள் ; உங்கள் மீது ஆண்டவனுடைய கோபாக்கினை உண்டாவதற்கு முன்னும், உங்களுக்கு எவரும் உதவி செய்ய முடியாமல் நீங்கள் கைவிடப்படுவீர்களே அதற்கு முன்னும், நீங்கள் உங்

கள் இறைவன் பால் திரும்பி கழிவிரக்கம் கொள்ளுங்கள். அவன் கட்டளைக்குப் பணிந்து ஒழுகுங்கள். உங்களுக்கு தேவனுல் அருளப்பட்ட நல்ல மொழிகளை ஏற்று, அதன்படி செல்லுங்கள். மேலும் உங்கள் மீது திடீரென்று தேவ விபத்து ஏதும் நேரிடும்முன், விபத்து வருகிறது என்பதை நீங்கள் உணர்வதற்குமுன், பேணிக்கொள்ளுங்கள். (ஸூரா: ஸுமர்; ருகூ: 6.)

## இறைவன் விண்ணையும் மண்ணையும் படைத்ததேன்?

அல்லாஹ்வே (மகா சக்தியுடையவன்;) அவனே! உங்களுக்காக பூமியை உங்கள் உறைவிடமாக சிருஷ்டித்தான். அவனே வானத்தை உங்களுக்கு மேற்கூரையாக்கித் தந்தான். அவனே உங்களுக்கு தோற்றங்களைத் தந்தான்; அவைகளை அழகாகவும் ஆக்கித் தந்தான். தூய்மையான பண்டங்களிலிருந்து உங்களுக்கு உணவுப் பொருள்களையும் அளித்தருளினுன். இத்தகைய இறைவனே உங்களெல்லோரையும் வளர்த்து பராமரிப்பவன். அவன் மகா அருள் அபிவிருத்தியுடையவன். சர்வலோகங்களையும் சம்ரக்ஷித்துக் காப்பவன் அவனே; அவனைத்தவிர வேறெவரும் வணங்குதற்குரியவர் இல்லை. ஆதலின் அந்த ஏக தெய்வத்தையே பணிந்து ஒழுகுங்கள். அவனுக்கு வணக்கத்தை செலுத்துங்கள். சகலவிதமான புகழ் தோத்திரம் அவ்விறைவனுக்கே உரியதாகும். சகல உலகங்களையும் காப்பாற்றுபவன் அவனேயாவன். (ஸூரா: மூமின்; ருகூ: 7)

## அல்லாஹ்வே உயிர் தருகிருன்; அழிக்கிருன்.

(மனிதர்களே,) முதன்முதலாக (ஆதிபூர்வ காலத்தில்) உங்களை மண்ணிலிருந்து அல்லாஹ்வாகிய இரக்ஷகனே சிருஷ்டித்தான். பின்பு உலகத்தின் கண் உங்களை, இந்திரியச் சொட்டிலிருந்து உற்பத்திப் பண்ணினுன். பிறகு, உதிரக் கட்டியிலிருந்து உங்களை உருவமாக்கினுன். பிறகு அவனே உங்களைத் தாய் வயிற்றிலிருந்து வெளியே ஜனிக்க வைத்து வெளிப்படுத்துகிருன். பிறகு உங்களை (தாய்ப் பாலால்) வளர்க்கின்ருன். இங்ஙனம் நீங்கள் வாலிபதசையை அடைகிறீர்கள். அக்காலை அவன் உங்களுக்கு ஆயுளை விருத்தி செய்கின்ருன். எனவே, கிழவனுகவும் ஆய்விடுகிறீர்கள். மேலும் உங்களில் சிலர் கிழவனுவதற்கு முன்னடியாகவே (இளமையில்) இறந்துப் போகிருர்கள். மேலும் உங்களில் சிலர், விருத்தாப்பியராகியும் உயிர் வாழ்கிருர்கள். இதெல்லாம், அவன் உங்களுக்கு விதித்துள்ள குறிப்பான தவணையை ஜீவியத்தால் அடைவதற்கேயாம். மகத்தான சக்தியின் இந்த ரகசியங்களை உய்த்துணர்ந்து பாருங்கள். எனவே, உங்களுக்கு உயிர்வாழ்வு தருகிறவனும், உங்களைப் பிறகு மரிக்கச் செய்கிறவனும்

அவ்வாண்டவனே யாவன். மேலும் அவன் ஒரு காரிய காரணத்தை உண்டாக்க நாடுவானுனல், 'ஆய்விடு' என்று கூறுகின்ருன். உடனே அது உண்டாய் விடுகிறது. (ஸூரா: மூமின்; ருகூ: 7)

## அல்லாஹ்விடமே வானம்-பூமியின் விசை உள்ளது.

வானலோகத்துடையவும் பூமிலோகத்துடையவும் (சிருஷ்டிச் சாதன) சாவி (விசை)களெல்லாம் அந்த அல்லாஹ்வினிடமே இருக்கின்றன. அவன் யாருக்காக விரும்புகிருனே அவர்களுக்கு, ஜீவனேபாய சாதனத்தை அதிகம் அருள் புரிகின்ருன். அவ்வாறே குறைத்து விடவும் செய்கின்ருன். எனவே, ஐயமின்றி, அவனே எல்லாப் பொருட்களையும் அறிந் தாளுபவனுக இருக்கின்ருன். (ஸூரா: ஷூரா; ருகூ: 2)

## அடியார் குறைகளைத் தீர்ப்பவன் அல்லாஹ்.

அவ்வாண்டவனே தான், தனது அடியார்களின் பாப மன்னிப்பு வேண்டுகோளை (தவ்பாவை) ஏற்றுக் கொள்கிருன். அவனே குறைகளைத் தீர்த்து வைக்கின்ருன். நீங்கள் என்னென்ன காரியங்கள் (பகிரங்கமாயும் அந்தரங்கமாயும்) செய்தபோதிலும் அதையெல்லாம் அவன் நன்கு அறிகின்ருன். எனவே, யார் நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டு நல்லனுஷ்டானங்கள் புரிகிருர்களோ, அவர்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொண் டருள்பவன் அவனேயாவன். ஆண்டவன் தன் அருளால் அவர்களுக்கு அதிகமான பாக்யம் தருகின்ருன். மேலும், யார் அவ்விறைவன் கட்டளைக்கு மாறு செய்தவர்களாய் விடுகிருர்களோ அவர்கட்கு கடுமையான தண்டனை அளிப்பவனும் அவ்விறைவனேயாவன். (ஸூரா: ஷூரா; ருகூ: 3)

## சோர்ந்துபோனவர்களை ஊக்குபவன் அல்லாஹ்.

அடியார்கள் (பஞ்சம் முதலிய துன்பங்களால்) மனம் சோர்ந்து போன பின்னர், அவர்களுக்கு ஊக்கம் உண்டாக்குவதற்காக, வானிலிருந்து மழையைப் பொழிய வைப்பவன் அல்லாஹ்வேயாவன். அவன் தன் இன்னருளை, எல்லா ஜீவராசிகட்கும் பொதுச் சொத்தாக்கி வைக்கிருன். சீர்கெட்டுப்போனவர்களின் ஸ்திதிகளை திருத்தி ஆக்கி வைக்கும் தகுதியாளன் அவனேயாவன். (ஸூரா: ஷூரா; ருகூ: 3.)

---

இஸ்லாமியச் சிறுகதை

# கோவளம் தர்க்காவில் :: :: :: கண்ட காட்சி.

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்.

அன்று இஸ்லாமிய மாதத்தின் முதல் வியாழக் கிழமையாதலால், கோவளம் தர்க்காவுக்குப் போகும் முஸ்லிம் ஆண் பெண்களின் கூட்டம் அதிகமாகவே இருந்தது. பஸ்ஸிலும், படகுகளிலும் ஜனங்கள் போன வண்ணமாகவே இருந்தனர். குழந்தைகளுடன் தாய்மார்களும், பெற்றோர்களுடன் பிள்ளைகளும், நண்பர்களுடன் நண்பர்களும், உறவினர்களுடன் உற்றார்களும் வெகு உத்ஸாகமாக போய்க் கொண்டிருந்தனர்.

சாதாரணமாக, சென்னை வாசிகள் கோவளம் போவதற்கு இரண்டே மார்க்கங்கள்தான் இருக்கின்றன. ஒன்று மோட்டார் பஸ் வழியாகப் போய், உப்பங்கழி வாய்க்காலை கடந்து தர்க்காவுக்குப் போய்ச் சேரவேண்டும். மற்றொன்று மைலாப்பூரைத்தாண்டி, பாப்பாஞ்சாவடி என்ற கூவம் நதித்துறையில் காத்திருந்து, படகுகளில் ஏறி நெடிய பிரயாணம் செய்து, இரவெல்லாம் போய் காலையில் கோவளம் குப்பத்தையடுத்த கரையில் இறங்கி, சிறிது தூரமே நடந்து சென்று தர்க்காவுக்குப் போய்ச்சேரலாம். மோட்டார் பஸ் வழியாய்ச் செல்வோர், ஆங்குள்ள உப்பங்கழி வாய்க்காலை கடக்க 50 அடி தூரமாவது படகில் போய்த்தான் தீரவேண்டும். இப்போது அங்கு நீண்ட பெரிய பாலம் கட்டி வருகிறார்கள். அந்தப்பாலம் கட்டி முடிந்து விட்டால் ஒருக்கால் தண்ணீரில் கால் நனையாமல், அல்லது படகில் ஏறித்தள்ளாடிச் செல்லாமல், கோவளம் தர்க்காவுக்குப் போய் வரும் பாக்கியத்தை சென்னை வாசிகள் பெறுவார்கள் என்று நம்பலாம்.

சென்னை வாழ் முஸ்லிம்கள் பலரும் ஹிந்துக்கள் சிலரும், சிரமப்பட்டு ஒவ்வொரு மாதத்து முதல் வியாழக்கிழமை மாலையில் (வெள்ளிக்கிழமை இரவில்) கோவளம் தர்க்காவில், மஹான் ஹஜ்ரத் தமீம் அன்ஸாரி (றஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்களின் சமாதியை தரிசித்து, பாத்திஹா ஓதி, தத்தம் கோரிக்கைகளை வேண்டிக்கொண்டு வீடு திரும்புவார்கள்.

இவ்வாறாக அன்று கோவளம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தவர்களில், நமது இளைஞன் அன்வர் பாஷாவும் ஒருவன். அன்வர் பாஷா தனியாகப் போகவில்லை. அவனது தகப்பனர், தாயார், தமக்கை, தம்பிகள் எல்லோரும் குடும்பம் சமேதாராய் போனார்கள். கோவளம் செல்லும் ஒவ்வொருவரும் அங்கு அடங்கியிருக்கும் வலியுல்லாஹ்

விடம் ஏதேனும் ஒரு கோரிக்கையை வேண்டி, ஹாஜத்துடன் தான் செல்வார்கள். இவ்வாறே அன்வர் பாஷாவுடைய பெற்றோரும் சில கோரிக்கைகளைப் பூண்டு அவைகள் நிறைவேற வேண்டுமென்ற நாட்டங் கொண்டேதான் சென்றார்கள். இளைஞன் அன்வர் பாஷாவுக்கு என்ன கோரிக்கை இருக்கப்போகிறது! அவன் காலேஜில் படிக்கும் மாணவன். நாகரிகமான மனப்போக்குடையவன். பெரியோர்களிடம் மரியாதை, சிறியோர்களிடம் அன்பு, உற்றார் உறவினர்களுடன் நட்புறவு முதலிய நல்ல குணங்களுடையவன். படிப்பதும், ஐந்து வேளையும் பள்ளிவாசலில் போய் தொழுதுக் கொள்வதும், நல்ல நண்பர்களுடன் பழகுவதும்தான் அவனுடைய நித்தியக் கருமங்கள். பொதுவாக நாகரிகம் தெரிந்த ஆங்கிலம் படித்த இளைஞர்கள் தர்காவுக்குச் சென்று பாத்திஹா ஓதுவதும், அவ்லியா அல்லாஹ்விடம் முராதுகள் வேண்டிக்கொள்வதும் வழக்கமில்லை. ஆனால் அன்வர் பாஷா, அப்படிப்பட்ட தீவிரவாதியல்ல; இஸ்லாத்திடம் பக்தியும் பெரியோர்களிடமும் அபிமானமும் உடையவனாக இருந்து வந்ததால், அவனுக்கு மஹான்களிடமும் வலியுல்லாக்களிடமும் துவேஷம் கிடையாது. அவனது பெற்றோர் அவ்லியாக்களிடம் அபிமானம் கொண்டிருந்ததைப்போல் அவனும் ஓர் அளவு நல்லபிமானம் கொண்டவன் தான். எனவே, கோவளம் தர்க்காவுக்கு அன்வர் போனபோது, பக்தியுடன் தான் போனான். இக்காலச் சில வாலிபர்களைப்போல், உல்லாசத்திற்காகவும், வேடிக்கை விளையாட்டிற்காகவும், தர்க்காவுக்கு வரும் பெண் பிள்ளைகளைப்பார்த்து பரவசம் அடைவதற்காகவும் அவன் போகவில்லை.

அன்வர் பாஷாவின் பெற்றோர், மோட்டார் பஸ்ஸில் பாப்பாஞ்சாவடி வரையில் போய் அங்கிருந்து வாடகைப்படகில் ஏறிப்பிரயாணம் செய்தார்கள். தனியாக ஒரு முழுப்படகையும் அவர்கள் வாடகைக்கு பேசிக்கொண்டதால், மிகவும் சௌகரியமாகவும் வசதியாகவும் பிரயாணம் செய்தார்கள். அன்று நிலா வெளிச்சம் இருந்ததால், அசைந்து போய்க்கொண்டிருந்த படகின் மேற்றளத்தின் மீது அன்வர் உட்கார்ந்து, வானத்தை நோக்கி இயற்கையின் மகிமைகளை எண்ணி எண்ணி ரசித்துக் கொண்டிருந்தான். வானவிதானத்தில் இலக்ஷக் கணக்கான நட்சத்திரங்கள், குளிர்தரும் எழிலான கண்சிமிட்டலுடன் காட்சி யளித்ததைக்கண்டு ரசித்துக் கொண்டிருந்தான். இலக்ஷக் கணக்கான நட்சத்திரங்கள் காட்சியளித்தும் வானத்தின் மத்தியில் பிரகாசிக்கும் முழுமதியாகிய சந்திரனுக்கு இணையாகாதென்பதை அன்வர் பாஷா சிந்தித்தான். ஆயினும் உலகில் லக்ஷக்கணக்கான பேர் தமக்கு வேண்டியவர்களாக இருந்த போதிலும் உண்மையுள்ள மஹானாகிய ஓர் உத்தம சகாயமும் வேண்டியிருக் கிறதென்பதை சிந்தித்தான். ஆகையினால் தான், பாமர ஜனங்கள் தர்காகளுக்குப் போய் அவ்லியா அல்லாஹ்விடம் தங்கள் கோரிக்கையை எல்லாம் நிறைவேற்ற

வல்ல அல்லாஹு தஆலாவிடம் வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கிறார்கள் என்பதையும் நிச்சயங் கொண்டான்.

இங்ஙனம் அன்வர் பாஷாவும் அவன் பெற்றோர்களும் போய்க் கொண்டிருந்த படகுக்கு சற்று பின்னால் ஒரு நூறு அடிகளுக்குப் பின்னால் தொடர்ந்து வேறொரு படகும் வந்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பின்னால் வரும் படகும் கோவளத்து மகானுடைய தர்க்கா வில் தரிசனம் நாடிச்செல்லும் கோஷ்டியாருடையதுதான் என்று நன் ருய் தெரியவந்தது. ஆனால் அன்வருடைய குடும்பத்தாருடைய போக் குக்கும் அந்தக் கோஷ்டியினரின், போக்குக்கும் பெருத்த வித்தியாசம் காணப்பட்டது. அதாவது, தொடர்ந்து வந்து கொண்டிருந்த படகில் ஹார்மோனியம் தபேலா வுடைய சப்தம் எழுந்தது. அத்துடன் இனிய குரலில் பாடும் சப்தமும் கேட்டது. உல்லாஸமாகவும் தமாஷா வாகவும் அந்தக் கோஷ்டியினர் ஆடல் பாடல் புரிந்துக் கொண்டு, கோவளத்துக்கு யாத்திரை போவது அன்வருக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஏனெனில், இஸ்லாமிய நலத்திற்காக தங்கள் ஆயுள் முழு வதும் உழைத்து அல்லாஹுடைய நல்லடியாராய் விளங்கிய மஹான் களுடைய ஆத்ம தரிசனத்தைநாடி தர்காவுக்கு யாத்திரை போகும் முஸ்லிம்கள், இப்படி யெல்லாம் ஆட்டமும் பாட்டமும் வேடிக்கையும் விளையாட்டும் போட்டுக் கொண்டு போய் வருவது நல்லதன்று என்று அன்வர் பாஷா நினைத்தான். ஆம், அத்தகையோர் தர்கா களுக்குப் போவது உல்லாஸத்திற் காகவே யல்லாது, உண்மையான பக்திக்காக அல்ல. அந்தோ!

இரவெல்லாம் படகு யாத்திரையிலேயே கழிந்துவிட்டது. அன்வர் பாஷா நடுநிசிவரை விழித்துவிட்டு, படகுக்குள் போய் தூங்கிவிட்டான். பின்னால் வந்து கொண்டிருந்த படகில் பாட்டுக் கச்சேரி எவ்வளவு நேரம் நடந்து கொண்டிருந்தது என்பதை அவன் கவனிக்கவில்லை.

மறுநாட் காலை சூரியன் உதயமாய்க் கொண்டிருந்த நேரம். இருட்படலம் நீங்கிக் கொண்டிருந்த ஸுப்ஹு நேரம். அந்நேரத்தில் அன்வர் பாஷாவுடைய குடும்பம் வந்த படகு, கோவளத்தை யடுத்த குப்பத்து ஆற்றங் கரையோரம் நிறுத்தப் பட்டது. எல்லோரும் இறங்கி ஊரை நோக்கிப் போகத் தொடங்கினார்கள். சிறிது நேரத்தில் பின்னால் வந்த படகும் கரையருகில் வந்து பிரயாணிகளை இறக்கிக் கொண்டிருந்ததை அன்வர் பாஷா பார்த்து விட்டு, கோவளம் கிரா மத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

* * * * * *

கோவளம் சென்னைக்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் கடற் கரையை அடுத்த ஒரு குக்கிராமம். அங்கு கடைத் தெருவும் உண்டு. கடைபஜார் உள்ள பகுதியின் பெயர் குப்பம். அங்கு கடற் கரையை

யடுத்து ஒரு தென்னந் தோப்பு உண்டு. நல்ல குளிர்ந்த கடற் காற்று வீசிக் கொண்டே இருப்பதால் அந்த இடம் மனோ உல்லாஸத்துக்கு ஏற்ற இடம். பொழுது போக்குவதற்கு நல்ல ஸ்தலம்.

இதையடுத்து சற்று தூரத்தில் கடலையடுத்த தொலைவில், பெரிய மணல் மேட்டுக்குப் பக்கத்தில் ஹஜ்ரத் தமீமுல் அன்சாரி (ரஹ்) அவர்களின் மஜார் என்னும் புனித கப்ரு இருக்கிறது. சமாதி என்னும் இந்த மஜாரை யடுத்து நாற்புறமும் மண்டபமும் கட்டிடமும் அமைந்திருக்கிறது. ஜியாரத்துக்கு வரும் ஜாயிரீன்களான யாத்திரீகர்கள் தங்கியிருந்து குர்ஆன், பாத்திஹா முதலியன ஓதுவதற்கு நிழல் தரும் வெராண்டா ஹாலும் அமைக்கப் பட்டிருக்கிறது. மத்தியில் நாற்புறச் சித்திரக் கண்கள் அமைந்த சதுரத்துக்குள் வலியுல்லாஹ்வுடைய மஜார் அமைந்திருக்கிறது. அங்கு எப்போதும் சதா அல்லும் பகலும் பக்தர்களும், ஊழியர்களும், பொது மக்களும் இருந்து கொண்டே இருப்பார்கள். ஆண், பெண், சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரர், கொடுப்போர், வாங்குவோர் என்ற வித்தியாச மில்லாமல், யாத்திரீகர்கள் வந்து கொண்டும், போய்க் கொண்டும் இருப்பார்கள்.

மகானிடம் மகிமை இல்லாமற் போனால் ஆயிரக்கணக்கான பேர் சதா இங்கு வந்து கொண்டும், போய்க்கொண்டும் இருப்பார்களா? ஆம். அல்லாஹ்வுடைய வலி என்னும் மஹான்கள், இப்பூலோக வாழ்வை விட்டு, மாணத்தின் பெயரால் மறுலோக வாழ்வுக்கு மறைந்துப் போனாலும், அவர்கள் இறந்தொழிந்துப் போவதில்லை என்பது இஸ்லாமிய சித்தாந்தம். "அல்லாஹ்வின் பாதையில் மரித்தோரை மாண்டவர் என்று சொல்லாதீர்கள்" என்பது திருமறை வாக்கு. அதன்படி பார்த்தால், மஹான்களாகிய அவ்லியாமார்கள், மரித்தும் ஆத்மார்த்த வாழ்வில் உலகில் சஞ்சரிப்பவர்களாகவும் உலகவாழ் மக்களின் மனோ குறைகளை ஏற்பவர்களாகவும், அவரவர்களின் தன்மைக் கேற்ப ஆண்டவனிடம் சிபாரிஷ் வேண்டுபவர்களாகவும் திகழ்கிறார்கள். இம்மஹான்களின் பொருட்டால்தான் உலகில் இஸ்லாம் மதம் நாடெங்கும் பரவியது.

இந்தக் கோவளம் என்னும் கிராமமும் ஆதியில் இஸ்லாத்தின் ஒளி படராது, குப்ரியத்தில்தான் மூழ்கி யிருந்திருக்கும். மஹான் ஹஜ்ரத் தமீமுல் அன்ஸாரி (ரஹ்) அவர்கள், அரபு நாட்டிலிருந்தோ, வடக்கு ஹிந்துஸ்தானி லிருந்தோ இங்கு வந்து, தன்னந்தனியே குடியேறி, கிராமக் குப்பத்து மக்களுக்கு தீனுல் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்தோதி இருப்பார்கள். எத்தனையோ எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கும். காபிர்கள் எதிர்த்துப் போராடி யிருப்பர். மகான் அவர்கள், தங்கள் கராமத்து என்னும் அற்புதங்களினால் அந்த ஊர் ஜனங்களின் மனதை மாற்றி, தன்னுடைய நேசர்களாகவும் பக்தர்களாகவும் செய்து இருப்பார்கள்.

இவ்வாறாக வெறும் குக்கிராமமாய் காபிர்கள் வதியும் குப்பமாய் இருந்த ஊர், இன்று தூரதூரப் பகுதிகளி லிருந்தெல்லாம் ஆயிரக் கணக்கான பேர்கள் வந்து, ஜியாரத் செய்து, கோரிக்கைகளும் ஹாஜத் துக்களும் நிறைவேற்றிக் கொண்டு போவதற்கு காரண ஸ்தலமாய் இருந்து வருகிறது. ஆஹா! அல்லியா அல்லாஹ்களின் மகிமை தான் என்னே.........''

என்று இவ்வாறு, நமது இளைஞன் அன்வர் பாஷா, அந்தக் கோவளத்து தர்க்காவில், மஜாரை யடுத்த மூலையில் உட்கார்ந்து சிந்தித்த வண்ணமாய் இருந்தான்.

* * * * * *

அன்று காலை படகை விட்டு இறங்கிய அன்வர் பாஷாவின் பெற்றோரும் சுற்றத்தாரும், அவ்வூரில், தனவந்தப் பிரபு ஒருவரால் தர்மத் துக்காக கட்டப்பட்டு, தர்க்காவில் ஜியாரத்துக்காக வருகிறவர்களுக்கு மாத்திரம் சொற்ப வாடகைக்கு விடப்படும் பங்களா போன்ற விடுதியில் தங்கியிருந்தார்கள். காலையில் தர்க்காவில் கூட்டமும் வனப்பும் இராததலால் மாலை நேரத்தில், விளக்கு ஒளியில் போய் பாத்திஹா ஓதி விட்டு வரலாம் என்று அன்வர் பாஷாவின் குடும்பத்தார், மேற்சொன்ன விடுதியில் தங்கி சாப்பாட்டிற்கு ஆக வேண்டிய காரியாதிகளை கவனித்துக் கொண்டிருக்கலாயினர்.

ஆனால் அன்வர் பாஷா அங்ஙனம் அலங்காரமும் ஆடம்பரமும் வேண்டுபவ னல்ல. காலை வேளையிலேயே, ஜனச்சந்தடி யில்லாத சுமுகமான நேரத்திலேயே, தர்க்காவுக்குப் போய், பாத்திஹா ஓதி குர்ஆன் ஓதி, தன் மனக்கோரிக்கையை நிறைவேற்றித்தர மகானிடம் ஆண்டவனுடைய ஷிபாரிசை வேண்டிக் கொள்வான் வேண்டி அங்கு விஜயம் செய்திருந்தான். நல்ல சிந்தனையோடு பிரார்த்தனையும் செய்து முடித்துக் கொண்டான்.

பிறகு அன்வர் பாஷா, தன் பெற்றோர் தங்கி யிருந்த ஜாகையில் தங்கி சிரம பரிகாரம் செய்து கொண்டான். சாப்பிட்டு விட்டு சிறிது தூங்கினான்.

அன்று இஸ்லாமிய மாதத்து முதல் வியாழக்கிழமை யாதலால், கோவளம் முழுதும் ஜனக் கூட்டமாகவே இருந்தது. எங்கு நோக்கினும் சென்னை நகர் வாழ், நாகரிகம் தெரிந்த முஸ்லிம்களே, நல்ல உடையலங்காரங்களோடு உல்லாசமாக அங்கு மிங்கும் வீணே உலாவிக் கொண்டிருந்தனர். இவர்களில், பொழுது போக்கிற்காகவும், தமாஷாவுக்காகவும் வந்தவர்களே அதிகம் பேர் காணப்பட்டனர்.

அன்று, மாலை நேரமாயிற்று. சூரியாஸ்தனமான சமயத்தில் கோவளம் மகா சோபையுடன் காணப்பட்டது. லஸ்தர் விளக்குகள்

தர்க்காவில் நாற்புறமும் ஏற்றப்பட்டு, வனப்புடன் ஒளி மயமாய் விளங்கியது. பாத்திஹா ஓதும் நிர்ணயத்தோடு, ஆணும் பெண்ணும் சிறியோரும் பெரியோருமாய், தர்க்காவுக்குள் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தனர்.

அருகே யிருந்த மஸ்ஜித் பள்ளி வாயலை யடுத்த வேப்ப மரத்து மதில் மேடையில் அன்வர் பாஷா அமர்ந்து, இந்த விசித்திரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆண்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அநேகமாய் பெண்கள் எல்லோரும் சுயேச்சையாய் சுதந்தரமாய், கோஷா பர்தா இன்றியே, அந்த தர்காவுக்கு வந்து போய் கொண்டிருந்தனர். முஸ்லிம் பெண்கள் பர்தா போர்வை ஏதுமின்றி இங்ஙனம் தான்றோன்றித் தனமாய் திரிவது அறிஞனாகிய அன்வர் பாஷாவுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அப்போது பாத்திஹா ஓத சர்க்காவை நோக்கி வந்த ஒரு புதுக் கோஷ்டியின் பரபரப்பு காணப்பட்டது. நாலாபுறமும் சிதறி, வருவோர் போவோரிடமெல்லாம் பிச்சைக் காசு கேட்டுக்கொண்டிருந்த பக்கீர்கள் "ஸவுக்கார் ஸாஹிப் வருகிறார், ஸவுக்கார் ஸாஹிப் வருகிறார்" என்ற சப்தத்தோடு, எல்லோரும் ஒரு மொத்தமாக கும்பலாக தர்க்காவுக்கு விஜயம் செய்து கொண்டிருந்த பிரஸ்தாப முஸ்லிம் கோஷ்டியை நோக்கி ஓடி வந்து கூடினர்.

அந்தக் கோஷ்டி அல்லது குடும்பத்தின் தலைவர்தான் சவுக்கார் கரீமுத்தீன்ஷா என்பார். இவர் சென்னை மாநகரில் பெரிய பணக்காரராம், தனவந்தராம், தர்மவானும், தயாளப்பிரபுவாம். இவர், ஒவ்வொரு பிறை மாதமும் முதல் வியாழக்கிழமை, கோவளத்துக்கு விஜயம் செய்வாராம். இந்தமுறை தன்னுடைய திருக்குமாரியை முதன் தடவையாக ஜியாரத்துக்கு அழைத்து வந்தாராம். அத்துடன் அந்தத் திருக் குமாரியுடைய திருக்கரத்தால், தர்க்காவுக்கு வரும் ஒவ்வொரு பக்கீர் பிச்சைக்காரருக்கும், ஒவ்வொரு முழு ரூபாய் தர்மம் செய்விக்கப் போகிறாராம். இதைக்கேள்விப் பட்டிருந்ததால் தான், சப்தம் கேட்டதும் பிச்சைக்காரரெல்லாம் கூட்டமாய் கூடி விட்டார்களாம். இதெல்லாம், ஜனங்களுடைய பேச்சு மூலம் அன்வர் பாஷாவுக்குத் தெரியவந்தன.

இந்த வேடிக்கையையெல்லாம் அன்வர் பாஷா பார்த்துக்கொண்டிருந்தான். இப்படியும் ஊரார் அறிய, உலகோர்போற்ற தர்மம் செய்வது அடுக்குமோ? கொடுப்பதை மறைமுகமாய் ரகசியமாய் கொடுத்தாலென்ன?வென்று அன்வர் சிந்தித்தவண்ணமே, சவுக்கார் ஸாஹிபுடைய திருக்குமார்த்தி தர்மம் செய்யும் வேடிக்கையையும் ஒரு கண் பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஏழைப் பிச்சைக்கார மக்களை வரிசையாக நிறுத்தப்பட்டனர். அந்தப் பணக்கார இளமங்கை, ஒவ்வொரு ரூபாயாக எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டே வந்தாள். அப்படி கொடுத்துக் கொண்டு வரும்போது, ஒரு ரூபாய் நாணயம் கைத்தவறி கீழே உருண்டு விழுந்து விட்டது. சட்டென்று அந்தப்பெண், லஜ்ஜையின்றி, இரண்டடி நடந்து, குனிந்து தன் கரத்தால் அதைஎடுக்கலானுள். அப்போது கடற்காற்றும் கடினமாய் வீசியதால், அவளது போர்வையும் முக்காடும் விலகி, அழகிய மதிவனமாம் முகத்தாமரை மலர்ந்து எழிலுடன் காட்சியளித்துவிட்டது. இத்திருவதனக் காட்சியை, இளைஞன் பார்த்துக் கண்கொட்டாமல், ஒரு கணம் திக்பிரமை யடைந்து விட்டான். ஏனெனின் அந்த மதிவதன முகத்தழகை அவன் இதற்கு முன் எங்கோ பார்த்ததுபோல் புலப்பட்டது. ஆனுல் எங்கே எப்போது எந்தச்சமயத்தில் பார்த்தோம் என்ற ஞாபகம் அப்போது வரவில்லை அன்வர் பாஷாவுக்கு.

எதிர்பாராத அதிருஷ்ட வசனமான அந்தக் காட்சியை, முக தரிசனத்தைக் கண்டதும் அன்வர் பாஷா, தன் வசமிழந்து பிரதிபிம்மமாய் சமைந்தான். அதன் பின் என்ன நிகழ்ந்ததென்பதை அறியவியலாமல் போனுன்.

இங்ஙனம் பல நிமிஷம் ஏக சிந்தனையில், அந்தக் கரிய நிறக்கண்ணழகியின் ஞாபகத்திலே ஆழ்ந்திருந்து விட்டான்.

அப்போது, அவனது தந்தை அங்கு வந்து, “அன்வர்” இன்னுமா இங்கு உட்கார்ந்திருக்கிறுய்? வா போவோம்! சீக்கிரம் போனுல்தான் தனிப்படகு வாடகைக்கு கிடைக்கும். எல்லோருக்கும் முன்னுல் பட்டணம்போய் சேருவோம் புறப்படு” என்று அழைத்துக்கொண்டு போனுர்.

போகும்போது “அப்பா! சவுக்கார் கரீமுத்தீன்ஷா என்பது யாரப்பா? அவருடைய குமார்த்தி, தர்க்காவில் ஏழைகட்கு ஒவ்வொரு முழு ரூபாய் தர்மம் கொடுத்தாள் ஆ! ஹா! என்ன தயாளகுளம்!” என்று பிரியமுள்ள தன் தந்தையிடம் கேட்டான் அன்வர் பாஷா.

“ஓ! அவருமா இன்று தர்க்காவுக்கு வந்திருந்தார், நேர்ச்சைக் கடனை நிறைவேற்ற மகளையும் அழைத்து வந்து அதை முடித்தார் போலும். சரி, எல்லாம் நல்லதுதான்” என்று அப்பெரியவர் சொல்லி சிந்திக்கத் தொடங்கி விட்டார்.

“என்ன பாவா, நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை, அவள் யார்? இல்லை யில்லை அவர் யார்?” என்று மேலும் கேட்டான் அன்வர் பாஷா.

அதற்குத் தகப்பனர் சொல்லலானர்:—“மகனே அன்வர்! அவரை நீ அறிவாயப்பா! சில வருடங்களுக்கு முன் நாம் காந்தி நகரில் இருந்த போது “கரீம் மாமா, கரீம் மாமா” என்று அழைப்பாயே அவர்தான். அப்போது அவர் நம்மைப்போல் இருந்தார். இப்போது பெரிய பணக்காரராகி, சவுக்காராகவும் பிரபுவாகவும் மாறிவிட்டார். மேலும், தர்க்காவில் தர்மம் செய்யஅழைத்து வரப்பட்ட குமாரியும் உனக்குத் தெரியும். ஆயிஷாபானுவை உனக்குத் தெரியாதா? மத்ரஸா பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அடிக்கடி நம் வீட்டுக்கு வந்துபோவாளே, அந்தச் சிறுமி தான், இப்போது வயது வந்த யுவதியாகி விட்டாள். இன்னொரு செய்தி, அந்தப் பெண்ணுடன் உனக்கு விவாகத்துக்கு அடுத்த மாதம் நிச்சயார்த்த ‘ஷுக்ரான’ செய்ய, நானும் சவுக்காரும் தீர்மானித்துள்ளோம்”

இதைச் செவியுற்றதும் அன்வர் பாஷா “அல்ஹம்து லில்லாஹ்” என்று சொல்லி சந்தோஷத்தில் ஆழ்ந்தான்.

இதுவும் ஹஜ்ரத் தமீம்அன்ஸாரி வலியுல்லாஹ்வின் மகிமையே என்று எண்ணினன்.

---


## கிபாயதுல் ஸாலிகீன் பீ தர்ஜுமத்தி ஹிகாயாதுஸ் ஸாலிஹீன்.

இதுவாகிறது ஸாலிஹீன்க ளென்னும் மேன்மை தங்கிய ஸஹபாக்கள் முதல் அவ்லியாக்கள் முதலான நாதாக்களின் ஹிக்காயத்துகள் என்னும் ஆகமத்தை பொதிந்தது. இதில் இருபது பாடல்கள் உண்டு. ஒவ்வொரு பாடத்திலும் பத்து பத்து ஹிக்காயத்துகளாக 200 ஹிகாயத்துகள் அமைந்திருக்கின்றன. இந்த ஹிகாயத்துகளைப் படிப்பதால் கல்பில் கறை நீங்கி, தெளிவு அதிகமாகிறது, ஸபற் ஸுஹது தவக்கல் ஸகாத்து முதலான நற்குணங்கள் குடிக் கொள்வதும் உண்டாகும். கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 2-8-0

ஷை அறபுத் தமிழ் கலிகோ பைண்டு விலை ரூ. 3-4-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்5.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 2–வது பகுதி)

### 3–வது அத்தியாயம்.

டாம் மிக கவலையுடன் தனது பங்களாவி லிருந்து வெளியே வந்து தங்களது மைதான வெளியில், தான் எங்கு போவதென்று தெரியாதவாறு நடந்தான். சுமார் ஒரு மைல் தூரத்தில் ஒரு பள்ளத் தாக்கு உண்டு. அது வரை நடந்தான். அந்த பள்ளத்தாக்கின் நடுவில் ஒரு வரப்பு போடப்பட்டுள்ளது. அது வரை இவர்களது நிலமும் அதற்கு மேல் கிரீன் உடைய நிலமும் உண்டு. அங்கு டாம் வந்ததும், அங்கிருந்து தூரத்திலுள்ள கிரீனின் பங்களாவைப் பார்த்தான்.

அவள் இச்சமயத்தில் உலாவ இப்பக்கம் வருவாளா வென்று எண்ணினன். பிறகு வரப்பு ஓரமாக கவனித்தான். அங்கு ஒரு தனி சிறிய கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அது கிரீனுக்கு முந்திய சொந்தக்காரர் கட்டிய கட்டடம். வெயில் காலத்தில் தனியாக தங்க வசதியான யிடம். ஆனல் கிரீனே பண வகையில் மிக கணக்கு பார்ப்பவன். அதைப் போல் தனியாக யிருப்பதற்கு பணத்தைச் செலவு செய்து ஒரு கட்டடம் கட்டுபவனல்ல.

மைதானத்திலோ யாரும் தென்படவில்லை. டாம் வரப்போரமாக சுமார் 10 நிமிஷம் நடந்தான். தான் முன்பு வரப்பில் ஒரு வழி செய்து வைத்த இடத்தை யடைந்தான். வரப்பைத் தாண்டினன். அந்த சிறிய கட்டிடத்தில் யிருந்த பெண், இவன் வரும் சப்தத்தைக் கேட்டு திரும்பி யாரோ அந்நியனைப் பார்ப்பதைப் போல் பார்த்தாள். எழுந்து அவனை நோக்கி வந்தாள். ஆனல் அவள் கண்களில் இவன் அங்கு வந்தது அவளுக்கு பிடிக்கவில்லை என்பது நன்ருகத் தெரிந்தது.

"காலை வந்தனம்" என்ருள்.

"காலை வந்தனம், குலோரியா" என்ருன் டாம்.

அவள் முகத்தில் அருவெறுப்புத் தோன்றியது. "நீ வராதிருந்தால் நலம்" என்ருள்.

அவள் நடத்தையைப் பார்க்க பார்க்க டாமுக்கு அதிசயமாகத் தோன்றியது. முன்பு இவள் எப்பொழுதும் சிறித்த முகத்துடன்

ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டு மிருப்பதைப் பார்த்திருக்கிறான். தற்போது அவள் நடத்தைப் பூராவும் மாறியுள்ளது. அவளுக்கு ஏதாவது உடம்பு அசௌகரியமாக யிருக்கிறதோ, அக்காரணத்தால் எப்பொழுதும் மனவருத்தத்துட னிருக்கிறாளோ என்று எண்ணினான்.

"ஏன் எப்பொழுதும் என்னுடன் இவ்வாறு வெறுப்பாக பேசு கிறாய். என்னை முன் பின் தெரியாத அன்னியனைப் போல் பாவிக்கி றாய் !" என்று கேட்டான்.

அவள் சிறிது சிறித்தவாறு "நான் அநேக கதைகள் படித்திருக் கிறேன். அதில் பெரிய பணக்காரருடைய பிள்ளைகளுடன் சகவாசம் வைத்த செக்ரடரி வேலை பார்க்கும் பெண்களின் கதியைப் பற்றி படித் துள்ளேன். அதை யறிந்த பின், நான் தற்போது நடந்து வரும் வழி ஒழுங்கான தென்று எண்ணுகிறேன். அதுவுமல்லாமல் ஒருவருக்கு மற்றொருவன் பேரில் பிரியம் யிருக்குமாயின் அந்நியோன்யமாக பழக லாம். இல்லாவிடில் அந்நியரைப் போல் தான் பாவிக்கப்படும். எனக்கோ உன் பேரில் பிரியமில்லை. அப்படி யிருக்க, என் நடத்தை யில் ஏதும் தப்பா ?" என்று கேட்டாள்.

டாமுக்கு பதில் சொல்ல நா எழவில்லை. முகமோ சிவந்தது. தன்னைத் தான் முட்டாளென்று எண்ணினான்.

"இன்னொன்று சொல்கிறேன் கேள். ஒரு ஜன நடமாட்ட மில்லாத பாலைவனத் தீவில், ஒரு பையனையும் ஒரு பெண்ணையும் விட்டு விட்டால், அந்த பையன் அப்பெண்ணைப் பார்த்து, உலகத்திலேயே இவள் ஒருவள் தான் பெண் என்று எண்ணுவது இயற்கையே. நாட்க ளாக ஆக அவனது கண்களுக்கு அப்பெண் மிக அழகுடையவளாகத் தோன்றுவாள். இதைப் போல் கதைகளும் நான் அதிகம் படித்துள் ளேன். அதே போல் நீயும் உனது காலத்தை பூராவும் உனது நிலங் களைக் கவனிப்பதிலேயே செலவழிக்கிறாய். இங்கு உனது நிலங்களுக் குள் பறவைகளும் முயல்களும், குலோரியாவும் தான் உண்டு. ஆதலால் நீ இதை விட்டு விட்டு பட்டணத்திற்கு போய் உன்னைச் சார்ந்த ஜனங்களுடன் பழக வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, தனது எஜமான் வருவதைப் பார்த்து சம்பாஷணையை நிற்பாட் டினாள்.

"குலோரியா ! நீ வீட்டுக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருப்பா யென்றல்லவா நினைத்தேன்" என்றார் கிரீன். அவருக்கு சுமார் 50-வய திருக்கும்; வழுக்கத்தலை யுடையவர்; மெலிந்தவர்.

பிறகு அங்கு நிற்கும் டாமைப் பார்த்து "வாரும், டாம்" என்று சொல்லியவாறு, குலோரியா பக்கம் திரும்பி "குலோரியா! நீ இவ்வாறு நேரத்தை வீணாக போக்குவது எனக்குப் பிடிக்கவில்லை" என்றார்.

"நான் உங்களது நேரத்தையோ எனது நேரத்தையோ வீணுக கழிக்கவில்லை. கணக்கு வேலையை முடித்து விட்டேன். இதோ பாருங்கள்" என்று குலோரியா சொல்லி, தனது கையிலுள்ள நோட் புஸ்தகத்தை காண்பித்தாள்.

"இந்த கணக்கை வீட்டிலிருந்து செய்யக்கூடாதா? இதைப் போல் வெளியில் வந்து கணக்கைச் செய்ய வேண்டுமா? சரி" என்று சொல்லி, டாமைப்பார்த்து "நான் உனது தகப்பனுரைப் பார்க்க வேண்டும், என்னுடன் வாருமே" என்ருர். இதற்கிடையில் குலோரியா அங்கிருந்து புறப்பட்டு விட்டாள். இனிதான் அங்கு நிற்பது சரியல்லவென்று, கிரீனுடன் டாம் நடந்தான்.

"தயவு செய்து அந்த பெண்ணுடன் சேர்ந்து, அவள் எனக்காக செய்யும் வேலையைக் கெடுக்காதே. அவள் எவ்வளவு வேலை செய்ய வேண்டுமென்று உனக்குத் தெரியாது. அதுவுமல்லாமல் நீ இவ்வாறு அவளை சந்திப்பது உனது தகப்பனுருக்கும் பிடிக்காது" என்று மெதுவாக கிரீன் சொன்னுர்.

டாமுக்கு இதைக்கேட்டதும் கோபம் துடுக்காக எதையும் சொல்லலாமென்று மென்று எண்ணினுன். அவ்வாறு சொல்வது ஒழுங்கல்லவென்று சமாளித்துக் கொண்டான். இவனுக்கு கிரீன் என்ருலே பிடிக்காது. அதுவன்றி சில நேரத்திற்குமுன், குலோரியாவினிடம் தனது அதிகாரத்தை செலுத்தியதை பார்த்த இவனுக்கு இன்னும் அவர்பேரில் அறுவறுப்பு தோன்றியது.

"அதைப்போல் பெண்கள்" என்று கிரீன் சொல்வதற்குள், வரப்பில் உள்ள வழியைப் பார்த்து, "இந்த வரப்பை யார் வெட்டி வழி செய்திருக்கக்கூடும்?" என்ருர்.

"நான் தான் வழிசெய்தேன். இந்த வரப்பு எங்களைச் சேர்ந்தது. உங்கள் வீட்டிற்கு சுற்றி வருவதைவிட இக்குறுக்கு வழியாக வந்தால் ½ மைல் சுருக்கமாகும்" என்ருன் டாம்.

கிரீன் அதற்கு யாதும் பதில் சொல்லாமல் நடந்தார். கொஞ்ச தூரம் சென்றதும், தனது கையை இறுகப்பிடித்ததாகத் தெரிந்து திரும்பினுர் கிரீன். டாம் கிரீன் கையைப் பிடித்தவாறு அங்குள்ள ஒரு பெரிய மரத்தின் அடி தண்டை முறைத்துப் பார்த்தான். டாம் பார்க்கும் திக்கில் கிரீனும் பார்க்க, கிரீனின் முகத்தின் நிறம் பயத்தால் மாறியது. அம்மரத்தின் அடி தண்டில் வட்டமாக சிகப்பு வர்ணம் பூசப்பட்டிருந்தது. வர்ணம் அப்பொழுது தான் பூசியதுபோல் ஈரமாக யிருந்தது.

## 4–வது அத்தியாயம்.

டாம் உடனே சுற்றிப்பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஒருவன் கையில் ஒரு பையுடன் நடந்து போவதைப்பார்த்து "ஏ! நீ யார்? இங்கு என்ன வேலை?" என்று சப்தமிட்டான்.

இந்த சப்தத்தைக் கேட்ட அந்த உயரமான தடித்த வழிப்போக்கன் "எனது பெயர் ஹட்டன்; என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்; நீ பெர்ரியின் மகன் தானே?" என்று கேட்டான்.

"ஆம் என் பெயர் டாம். நீ இங்கு என்ன செய்கின்றாய்?"

"ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இது ஒரு குறுக்கு வழி என்றுச் சொன்னார்கள். நான் உனது தகப்பனாரைப் பார்க்கப் போகின்றேன்"

"அந்த மரத்தின் அருகே போய் இருந்தாயா? என்று டாம் கேட்க "நான் ஏன் எந்த மரத்தின் அருகேயும் போக வேண்டியது. நான் இந்த வழியாக வருகிறேன்" என்று ஒரு வழியைக் காண்பித்தான்.

இதற்கிடையில் மரத்தின்பேரில் உள்ள சிகப்பு வட்டத்தை பயத்துடன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த கிரீன் திரும்பி பார்த்து "ஓ! இவரா! இவர் தெரியுமே. ஏன் ஹட்டன். இந்த மரத்தின் அருகே யாரையும் பார்த்தாயா?" என்று கேட்டார்.

ஹட்டன் தலையை அசைத்தவாறு "அங்கு மரம் இருப்பதே எனக்கு தெரியாது. நான் இந்த வழியில் அல்லவா வந்தேன். என்ன விஷயம்?" என்று ஹட்டன் கேட்டார்.

"ஒன்றும் இல்லை" என்று கிரீன் பதில் சொன்னார்.

பிறகு மூவரும் டாம் வீட்டை நோக்கிச் சென்றனர். வீட்டின் அருகே வரும்பொழுது திடீர் என்று ஹட்டன் பயந்தவாறு அலறினான். உடம்பெல்லாம் வியர்த்தது; கைக்கால்கள் நடுங்கின. டாம் இதைப்பார்த்ததும் திகைத்தான். சிகப்பு வட்டத்தைப் பார்த்ததால் உள்ளுக்குள் பயத்துடன் இருந்த கிரீன், ஹட்டன் அலறியதைப் பார்த்ததும் திகில் அடைந்தார்.

"என்ன ஹட்டன் என்ன விஷயம்?" என்று பதைப்பதைப்புடன் கேட்டார்.

"ஒன்றுமில்லை எனக்கு........" என்று ஹட்டன் சொல்வதற்குள் "குடிதவறி தலைக்கேறி இருக்கிறதா?" என்று கிரீன் கேட்டார்.

பிறகு வீட்டுக்குள் நுழைந்ததும் டாம் அவர்களை அங்கு விட்டு விட்டு ஸிம்ஸனைத் தேடிச்சென்ருன். வீட்டுக்கு பின்புறம் உள்ளத் தோட்டத்தில் ஒரு பிரம்பு நாற்காலியில் சாய்ந்தவாறு ஸிம்ஸன் உட்கார்ந்திருந்தார். டாம் வரும் சப்தத்தைக் கேட்டதும் திரும்பிப் பார்த்து "டாம்! எனக்கு தெரியாது. திடீரென்று ஹட்டன் ஏன் பயந்தார் என்று என்னிடம் கேட்க நீ வருகிருய்" என்ருர்.

"ஆம் என்ன ஆச்சரியம்! நானும் அதைக்கேட்கவே உங்களைத் தேடிவந்தேன். நீங்களும் அவர் பயந்ததைப் பார்த்தீர்களா?"

"நான் ஹட்டனை, பயந்து அலருவதற்கு முந்திப் பார்த்தேன். இங்கு இருந்து வயல் தெரிகிறதுபார். அங்கு அவர் நடந்து வரும் பொழுது பார்த்தேன். அவரை இதற்கு முன்பு எங்கோ பார்த்த ஞாபகம் இருக்கிறது. அடிக்கடி அவர் இங்கு வருவதுண்டா? உன் தகப்பனுரும் யாரோ ஹட்டன் இன்று வருவதாக சொன்னுர். இவரைப் பார்த்ததும் இவர்தான் ஹட்டனு யிருக்கலாமென்று எண்ணினேன்" என்ருர் ஸிம்ஸன்.

"இதுதான் முதல் தடவை நான் அவரைப்பார்ப்பது. ஆனுல் முன் ஒரு நாள் எனது தகப்பனுர், தானும் கிரீனும் ஏதோ வியாபார விஷயமாக ஹட்டனுடன் பேச்சு வார்த்தை நடத்தியதாக சொன்னது ஞாபகம் வருகிறது. இந்த ஹட்டன் நிலங்களை வாங்கி விற்பவர். தகப்பனுருக்கும் தற்போது நிலங்கள் கொஞ்சம் வாங்கலா மென்னும் அபிப்பிராயம். அதிருக்கட்டும். இன்னென்று உங்களிடம் சொல்ல மறந்து விட்டேன். நான் சிகப்பு வட்டமொன்றைப் பார்த்தேன்" என்று டாம் சொல்லி, தான் பார்த்த வட்டத்தைப்பற்றி விபரித்தான்.

"நான் கிரீன் வீட்டு பக்கம் போகும்போது அந்த மரத்தைக் கடந்து தான் போனேன். அப்பொழுது அந்த வட்டம் இல்லை. நான் அங்கு ஒரு சிநேகிதருடன் பேசிக்கொண்டிருக்கும் போது இவ் வட்டம் பூசப்பட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றி உங்களபிப்பிராயம் யாது?" என்று டாம் கேட்டான்.

"அப்படியாயின் அபாயம் நெறுங்கி விட்டது!" என்று சொல்லியவாறு ஸிம்ஸன் அங்குமிங்கும் உலாவிய வண்ணம் சிந்தனையிலாழ்ந்தார். இதைப்பார்த்த டாம் அவரைவிட்டு நீங்கினுன்.

ஹட்டன் ஒரு நிலத்தை விற்பதற்காக இங்கு வந்தார். ஆனால் இன்று அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் ஒன்றும் பேச முடியவில்லை. நிலத்தைப்பற்றி விபரிக்கவு முடியவில்லை. "எனக்கு இன்று உடம்பு அசௌகரியமாக யிருப்பதால், நமது சம்பாஷணையை நாளை ஒத்திவைக் கலாம்" என்றார் ஹட்டன்.

"இதைக் கேட்பதற்குத்தானா இன்று இங்கு வந்தேன். எங்களுக்கு வேறு வேலையில்லையா? இன்றே நமது பேச்சை முடிக்க வேண்டும். உங்கள் அபிப்பிராயம் யாது? மிஸ்டர் பெர்ரி?" என்று கிரீன் கேட் டார்.

"இன்றே இவ்விஷயத்தை முடிக்கவேண்டு மென்ற அவசிய மில்லை. பாவம்! ஹட்டனுக்கும் ஏதோ அதிர்ச்சியினால் அசௌகரிய மாகத்தோன்றுகிறார். ஏன் அவரை தொந்தரவு செய்ய வேண்டும்? மிஸ்டர் ஹட்டன்! உங்களுக்கு உடம்பு அசௌகரியமாக யிருப்பதால், ஒன்றிரண்டு நாட்கள் இங்கேயே தங்கி போகலாம்" என்றார் பெர்ரி.

"முடியாது, முடியாது என்னால் இங்கு தங்க முடியாது" என்று தன்னையறியாமல் உறக்க சப்தமிட்டார் ஹட்டன்.

"சரி உன் இஷ்டம்போல் செய்யலாம்" என்று பெர்ரி சொல்லி, தன் முன்னிருந்த நில பத்திரத்தை மூடிவைத்து, மூவரும் முன் ஹாலுக்கு வந்தனர். அங்கு டாமும் யிருந்தான்.

பெர்ரி காரில் ஹட்டன் தன் கையில் கொண்டு வந்த பையுடன் ரெயில்வேஸ்டேன் சேர்ந்தார். அங்கு சென்றபின் அவர் நடத்தையே மாறியது. கையிலிருந்த பையை ரிஜிஸ்டர் போஸ்ட்டில் பட்டணத் திற்கு அனுப்பினார். தான் டிரெயினில் ஏறி 9 மைல் தூரத்திலுள்ள அடுத்த ஸ்டேஷனில் இறங்கினார். ஹட்டனுக்கோ அதிக தூரம் நடக்க பிரியமுமில்லை. அவ்வாறு நடப்பது மில்லை. ஆனால் தற்போது அடுத்த ஸ்டேஷனிலிருந்து பெர்ரி நிலம் வரை 9 மைலும் திரும்பி நடந்து வந்தார். இங்கு வந்ததும் காலையில் வந்த மாதிரி குறுக்கு வழியை பிடிக்கவில்லை. பெர்ரி நிலங்களுக்கு வெளியில் ஒரு மறைவில் உட் கார்ந்து இரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். முன்பே தனது பையிலிருந்து எடுத்து, தனது கோட் ஜேபியில் வைத்த கைத்துப் பாக்கி ஒழுங்காக யிருக்கிறதாவென்று பார்த்தார்.

(தொடரும்.)

# ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா
## அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

(அய்யம்பேட்டை, S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

(4—வது பகுதி)

### திர்ச்சலாவின் சண்டை
### 10 லக்ஷம் பூதங்கள் எதிர்க்கவந்தன.

திர்ச்சலா, தன் சிப்பந்தி வாயலாய் அந்த வார்த்தைகளைக்கேட்டதும் ஆ! ஓர் அற்ப பகீர் இவ்வளவு முரட்டுத்தனமாக பேசுவதாயிருந்தால் அவனை எப்படியாவது வேலை முடித்து அவனைச் சேர்ந்தவர்களையும் என் எல்லைக்குள்ளிருந்து வெருட்டியடிக்காமற்போனால் அதைவிட எனக்கு பெரிய அவமானம் உண்டோ? என தனக்குள் பெருவாறு யோசனை செய்து 10 லக்ஷம் பூதங்களை யுத்தத்திற்கு அனுப்பினான்.

அவைகள் எத்தனையோ விதமான ஆயுதங்களை யெடுத்து வந்தன. வந்ததும் அவைகள் எல்லோருங்கூடி கலந்தர் பகீர்கள்மீது கண்மூடித்தனமாக வந்து விழுந்தார்கள்.

இப்பக்கம் ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்கள் ஒருவரே இருந்து கொண்டு தம் சுட்டுவிரலை காண்பித்தபோது அவர்களின் தலைகள் வெட்டுண்டு வெகுதூரத்திற்கப்பால் போய்விழுந்தன. அப்பால் ஹஸரத் அவர்கள் மீதியான பூதங்களுக்கும் அவைகள் தாக்க முன் வந்தபோது தம் சுட்டு விரலையும் காண்பிக்காமல், சற்று கோபப்பார்வையைக் கொண்டு அவைகளை உற்றுநோக்கவே அவைகளும் மடிந்தன.

திர்ச்சலா தன் போர்வீரர்களின் தோல்வியைப்பற்றி கேட்டதும் இனி என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் மனங்கலங்கினான்.

ஆயினும், அவன் பகிரங்கத்தில் ஹஸ்ரத் நத்ஹர்வலிக்கு மிரட்டல் கடிதமொன்றை எழுதியனுப்புகிறான். அக்கடிதத்தின் சமாச்சாரச் சுருக்கம் அடியில் வருமாறு:—

ஆண்டவன், பேய் பிசாசு, பூதங்களை அக்கினியைக்கொண்டு படைத்தான். மனிதனை அவன் அற்ப மண்ணினால் படைத்திருக்கிறான்.

அப்படியிருக்க நீர் இவ்விடம் வந்து என் பூதங்களை அழிக்க மேன் மேலும் துணிந்து விட்டீர். நான் ஒரு தத்துவ புருஷனாக இருந்து வருகிறேன் என்பதை நீர் மறந்து விட்டீர்போலும். நான் என் உயர்ந்த அந்தஸ்திலிருந்து கொண்டு ஓர் க்ஷீணதசையில் உள்ள பகீர் உடன் யுத்தம் புரிவதா என்று யோசித்து பொறுமையுடன் சும்மா இருந்து வருகிறேன். ஆகையால் நீர் உம்மைச் சேர்ந்த பகீர்களுடன் உயிரை காப்பாற்றிக் கொள்ளவிரும்பும் பட்சத்தில், இக்கடிதம் கண்ட வுடனேயே எங்கேனும் புறப்பட்டுப் போய்விட வேண்டும்.

## திர்ச்சலா பேருக்கு ஹஸ்ரத் நத்ஹர் வலியின் பதில்

"பேய், பிசாசு, பூதங்கள் ஆகியவைகளை ஆண்டவன் நெருப்பினால் படைத்திருப்பது சரிதான். ஆனால் அந்த நெருப்பையும் சாதாரண தண்ணீரைக் கொண்டு அணைத்து விடுகிறார்கள். என்னிடம் இருக் கும் அரிய தண்ணீரினாலேயே உன்னுடைய 10 லக்ஷ பூதங்களின் அக்கினிக்கு நேற்று என்னகதி நேர்ந்ததென்பதை நீ அறிவாய். எந்த ஒருவனில் பரிசுத்த ஆத்ம சக்திகள் நிறைந்திருக்கின்றனவோ அவன் சாதாரணமாக தன் எதிரியை கண்ணெடுத்துப் பார்த்தாலே போதும்.

எனவே, நீ என்னை பயமுறுத்தாதே, நான் உன் மிரட்டலுக்குப் பயப்பட மாட்டேன். ஒருக்கால், நீ என்னை எதிர்க்க வேண்டு மென்றே தீர்மானித் திருக்கும் பட்சத்தில் யுத்தகளத்திற்கு உன்னுடன் உன் மாமனாகிய தஸாஸிரையும் அழைத்து வருவாய்"

ஹஸ்ரத் நத்ஹர் வலியின் கடித சமாசாரத்தை படித்துப் பார்த் ததும் திர்ச்சலா விசேஷ ஆத்திரமடைந்தான். அவன் அதே சமயம் தன் பட்டாளத்தையும் அதன் தளகர்த்தரையும் தன்முன் கூப்பிட்டு தனக்கு வந்துள்ள கடிதத்தின் சமாச்சாரத்தையும் படித்துக் காட்டி னான்.

"நீங்கள் எல்லோரும் உடனே யுத்தத்திற்கு தயாராகி விடுங்கள். நாம் இந்த பகீர்களை இங்கிருந்து சிதறடிக்க வேண்டும். இல்லா விட் டால் இனி நாம் இங்கே இருந்து பேர்போட முடியாது. இவர்கள் மனிதரா யிருப்பினும் அந்தரங்கத்தில் எங்களுக்கு ஓர் துன்பத்தைப் போல் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்"

இனி இரு சாரர்களுக்கிடை யுத்தகளத்தில் சண்டை மூண்டது. சண்டை ஆரம்பிக்குமுன் ஹஸ்ரத் தம் பகீர்களுக்கு அவர்கள், திர்ச் சலாவையும் அவன் மாமனையும் கண்டு பயந்துவிட வேண்டாமென தைரிய மூட்டினார்கள். பின்னர் அவர்கள்மீது ஏதோ குர்ஆன் ஆயத்தை தமக்குள் ஜெபித்து அதை ஓதியும் விட்டார்கள்.

திர்ச்சலாவின் நீண்ட கூர்மையான பற்கள் வாளைப் போன்ற கூர்மையைக் கொண்டிருந்தன. அவை, அவனுக்கு மனிதனை மென்று தின்னவும் அனுகூலமா யிருந்தன. அவன் தலை வானத்தை ஒட்டக் கூடியது என்று சொல்லும்படியான நிலைமையில், அவன் அவ்வளவு உயரமா யிருந்தான்.

படையின் தலைமை வாய்ந்த பூதம் வாளுடன் எதிரில் வந்து கர்ஜித்து கலந்தர்களை நிந்தித்து பேசினதும், ஹஸ்ரத் அவர்கள் தம் மாஜி மந்திரியான ஷம்ஸ் பர்ரானை கூப்பிட்டு அந்த பூதத்தை எதிர்க்கு மாறு ஆக்ஞாபித்தார்கள்.

ஹஸ்ரத் ஷம்ஸ் பர்ரான் அதற்கு எதிரில் போய் "அடே இதோ பார்! நான் வந்து விட்டேன். நீ மனிதனுடைய மாமிசத்தை பற்களால் கடித்து தின்று விடுகிறாய் என்று கேள்வியுற்றேன். இப்போது காண்பி உன் சாமார்த்தியத்தை" என்றதும் அப்பூதம் இவர்மேல் பாய்ந்தது.

ஹஸ்ரத் ஷம்ஸ் பர்ரான் அலியே! வுதவி புரியும் என்று சொல்லி தம் வாளை பிரயோகித்தபோது பூதத்தின் தலை வேறு, உடல் வேறாக அப்பால் போய் விழுந்தது. அடுத்தாற்போல் அதே விதமான மற்றொரு பூதமும் வந்தபோது, ஷம்ஸ் பர்ரான் அவர்களின் வாளின் ஓரே வீச்சில் அதையும் கரையேற்றினார்கள்.

இப்படியே அப்போதைய மீதி மிச்சமான பூதங்களும் ஒவ்வொன்றாக ஒழிந்து வந்ததும் மகா வீரதீரன் என்ற திர்ச்சலாவே எதிரில் வந்தான். அவன் தன் திரேகத்தில் கவசமும் தலையில் இரும்புக் குல்லாயொன்றையும் அணிந்திருந்தான். அவன் வந்தவுடன் தன்னைப் பற்றி அளவுகடந்து சிலாகித்துப் பேசியதற்கு மாறாக கலந்தர்களை மிக்க கேவலப் படுத்தியும் பேசினான்.

ஹஸ்ரத் நத்ஹர் வலிக்கு அவன் வார்த்தைகளைக் கேட்டவுடன் ரோஷம் ஏற்பட்டது. கண்கள் சிவந்தன, உடனே அவர்கள் எழுந்து தம் நீளச் சட்டையை யணிந்து தலையில் தலைப்பாகை வைத்து கையில் வாள் ஏந்தியவர்களாக களத்திற்குச் சென்றார்கள்.

ஹஸ்ரத் அவர்களைக் கண்டதும் திர்ச்சலா சிரித்துச் சொல்லுகிறான், "இந்த ஒருவரைக் கொண்டுதான் இங்குள்ள குழப்பங்கள் யாவும் நடை பெறுகின்றன. எல்லா கிளர்ச்சிகளுக்கும் மூல புருஷன் இவர்தான்"

அப்பால் திர்ச்சலா ஹஸ்ரத்தை நோக்கி "ஓ அற்ப பகீரே! உம்மை இந்த விடத்திலேயே கொன்று குவியலாக்கப் போகிறேன் பாரும்"

அதைக் கேட்ட ஹஸ்ரத் அவர்கள் "நீ பெரிய கெட்டிக்காரன் சண்டைத் திறமையில் இணையற்றவன் என்பதாக பிதற்றிக் கொள் கிருய் என்பதற்காகவே நான் உன்னை எதிர்த்து சண்டை செய்ய நிற் கிறேன். இல்லையேல், இந்த சுண்டுவிரலின் சக்தியே உன்னையும் அழிக்கப் போதுமானது" என்று சொல்லியதும் அவன் பேரிலும் அவனைச் சேர்ந்தவர்கள்மீதும் அம்பு எய்தினர்கள். இவர்களின் அம்பு அவர்கள் பேரில் பட்டதும் பட்டவனை உயிர் துறக்கச் செய்கிறதே யொழிய அவர்களின் ஆயுதப் பிரயோகம் இவர்களுள் ஒருவரையாவது ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படியாகவே அந்த பகல் பூராவும் கழிந்து சாயங்கால நேரமும் வந்தது.

திர்ச்சிலா, அப்போது பெரும் ஆயாசத்துடன் ஹஸ்ரத் அவர் களுக்கு சொல்லிப் போகிறுன், "நான் அம்பு வித்தையில் இமயகிரி முதல் அஸ்தகிரி வரையில் பெரியதோர் வித்வானுக விளங்கி வருபவன். எத்தனையோ தடவை உம்பேரில் அம்பு எய்துங்கூட அதில் ஒன்ருவது உம்மீது படவில்லை என்பதிலிருந்து நீர் பெரியதோர் மந்திரவாதி என்றே சொல்லுவேன். ஆகட்டும் இப்போது போய் வாரும், நாளை மீண்டும் உம்மை ஒருகை பார்க்கிறேன்"

அவனைச் சேர்ந்தவர்களும் அவனுமாக ஒரு வாரம் வரையில் தொடர்ந்தாற் போல் அம்பு யுத்தம் நடத்திப் பார்த்தார்கள். ஒன்றும் நடக்காததால் எல்லோரும் ஹஸ்ரத் நத்ஹர்வலி புறமாகவே சாய்ந் தனர். அதாவது சரமாரியாக ஹஸ்ரத் அவர்கள் பேரில் அம்புகள் எய்ததைக் கண்ட கலந்தர்கள் உடனே தங்கள் முழு பலத்தையும் பிரயோகித்து தாங்களும் அதற்கு மேற்கொண்டளவிலேயே தங்கள் கைவசமுள்ள சகலவித ஆயுதங்களையும் பிரயோகித்தனர். எதிரிகளில் முறையே சிலவற்றிற்கு மூக்கும், காதும், தலையும், கண்ணுமாக காய மடைந்தது. உயிர்ச் சேதத்தைப் பற்றியும் இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது.

"ஷம்ஸ் பர்ரான்" "ஷம்ஸ் கோயான்" தனித்தனி நாமமுள்ள ஹஸ்ரத் அவர்களின் மந்திரிகளும் விரோதிகளை சின்னபின்ன மாக்கி விட்டார்கள். யுத்தகளத்தில் தக்பீர் சப்தங்கள் முழங்கி நின்றன.

திர்ச்சலா மட்டுமே இதுவரையில் தப்பித்துக் கொண்டிருந்து கடைசியாக ஹஸ்ரத் அவர்களை நெருங்கி ஏழு தடவைகளில் வாளை பிரயோகம் செய்தான். ஆனல் அந்த தடவைகளிலும் அவர்களுக்கு எவ்வித தீங்கும் நேரிட வில்லை.

திர்ச்சலாவின் ஏழு பிரயோகங்கள் முடிந்தவுடன் ஹஸ்ரத் அவர் கள் தம் வாளை யேந்தி "பார் இனி என் வாளின் சக்தி" எனச் சொல்லி

18703

அவன் பேரில் பிரயோகித்தவுடன் திர்ச்சலாவின் 3 தலைகளும் ஏக காலத்தில் வெட்டுண்டு போய் கோட்டை வாயலண்டை விழுந்தன.

திர்ச்சலாவின் மரணத்தால் பூதகணங்களுக்கு விசேஷ ஆத்திரமும் துக்கமும் ஏற்பட்டன. அவைகளில் சில கலந்தர்களை எதிர்த்து மாண்டன. சில எதிர்க்க இயலாமல் போகவே அக்காட்டை விட்டே ஓடிப்போயின.

ஹஸ்ரத் நத்ஹர்வலி, இந்த யுத்தத்தில் வெற்றி யடைந்தபின் கலந்தர்களுடன் புறப்பட்டு மீண்டும் காட்டின் வழியே சென்றார்கள்.

இப்போதும் அந்த ஓடிப்போன பூதகணங்கள் கலந்தர் கோஷ்டியினர் களுக்கு வழியில் ஆங்காங்கு தீங்கு விளைவித்து வந்தனவாயினும் ஹஸ்ரத் தம் கோஷ்ட்டியுடன் ஏழாவது நாள் சரீர சௌக்கியத்துடன் திருச்சினப்பள்ளிக்கு வந்து சேர்ந்தார்கள்.

திருச்சினப் பள்ளியில் உள்ள மலை மீது, ஹஸ்ரத் தம் தோழர் களுடன் ஏறி அங்கு இளைப்பாற ஆரம்பித்தார்கள்.

திரிச்சலா உடைய துக்கத்தில் ஆழ்ந்திருந்த பூதகணங்கள் யாவும் (திர்ச்சலாவின் விஷயத்தில் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தின்கீழ்) அம்மலையின் அடிவாரத்தில் சூழ்ந்து நின்றன. "கலந்தர் பகீர்கள் தங்கள் சகல விதமான புசிகர்ணங்களுக்காகவும் மலையடிவாரத்திற்கு வந்தே தீரவேண்டும். அவர்கள் மலையிலிருந்து இறங்கவும் அல்லது ஏற விடாமலும் தடுத்து விட்டால் உணவு பதார்த்தங்கள் அவர்களுக்கு செல்ல முடியாது. இந்நிலைமையில், சிலநாட்களுக்குள்ளாகவே அவர்கள் பசிப்பிணியால் இறந்து விடுவர்" பூதகணங்கள் யாவும் ஒன்றுகூடி ஆலோசனை செய்து இவ்வாறான தீர்மான மொன்றை நிறைவேற்றி விட்டன.

தங்கள் விஷயத்தில் இவ்வாறு ஓர் முட்டுக்கட்டை பூதங்களினால் போடப்பட்டு விட்டதென்ற இரகசியத்தை கலந்தர் ஒருவர் ஹஜ்றத் அவர்களுக்கு தெரிவித்தபோது அவர்கள் சிரித்த முகமாக அல்லா போதுமானவன் என்று சொன்னார்கள்.

மலையின் மீது ஹஸரத் அவர்களுக்கெதிரில் காலை தொழுகைக்கு முன்னமே, குளிர்ந்த ஜலம் 12 குடங்கள் நிறைய வைக்கப்பட்டு வந்தது.

"தஹஜ்ஜுத்" தொழுகையை முடித்தபின்னர், ஹஸ்ரத் அவர்கள் என்றைக்கேனும் தம் கோபப்பார்வையைக் கொண்டு அக்குடங்களை பார்ப்பார்களாகில் அவை அதே சமயம் நொருங்கிப்போய் வந்தன வென்றும் கூறப்பட்டிருக்கிறது.

தமது கோப சமயத்தில் யாதொரு கலந்தர் பகீர்கூட தமக்கெதிரில் வந்தால் வருபவருடைய மண்டை உடைந்து விடும் அல்லது சரீரமே புசிங்கிவிடும் என்பதை முன்னிட்டு அச்சமயம் ஒருவரும் வராதிருக்குமாறு ஹஸ்ரத் அந்த பகீர்களுக்கு ஆக்ஞாபித்திருந்தார்கள். மலையில் சிலநாட்கள் வரையில் பகீர்களுக்கு பசிக்கஷ்டம் சகிக்கவும் நேர்ந்தது. ஆனால் இப்படி யிருந்த சமயம் மலைப்பாம்பு ஒன்று, ஜலம் நிறைந்த 12 குடங்களை தானே சுமந்து கொண்டு வந்து ஹஸ்ரத் அவர்கள் சமுகத்தில் சேர்த்து வந்தது.

அப்பாம்பிற்கு அதன் தலையில் எட்டு கஜம் நீளமுள்ள படமும் 12 தலைகளும் அமைந்திருந்தனவாம். பாம்பு வரப்போக விருந்த காட்டிலிருந்தே புலியொன்று ஹஸ்ரத் அவர்களுக்கான ஆகாரத்தையும் தினசரி இரவில் கொண்டு வந்து சேர்த்தது. ஆக ஹஸ்ரத் நத்ஹர் வலியின் "காமத்" கொண்டு புலியும் பாம்பும் அவர்களுக்கு சேவை செய்து வந்தன.

சில நாட்கள் வரையில் அதேபோல் நடந்து வருகையில், ஒரு நாள் ஹஸ்ரத் அவர்கள் காலை தொழுகையை தொழுதுவிட்டு தம் தோழர்களை விட்டும் தனிப்பட்டு ஒதுக்கமானதோர் இடத்தில் தஸ்பீஹ் (ஜெபமாலை) ஜெபித்துக் கொண்டிருந்ததை கண்ணுற்ற பூத கணம் ஒன்று ஹஸ்ரத் அவர்களை வேலை முடிக்க இதுவே தக்க சமயம் என்றெண்ணி ஓடிப்போய் தம் சகபாடிகளான இதர எல்லா பூத கணங்களையும் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் அவர்கள் வீற்றிருந்த இடத்திற்கு வந்தது.

அங்கு அவை யாவும் யோசனை செய்து ஓர் உபாயத்தை கண்டு பிடித்தன. அதாவது, ஹஸ்ரத் அவர்கள் எந்த விடத்தில் வீற்றிருந்தார்களோ, அந்த விடத்தில் அவர்களுக்குப்பின் புறமாக, அம்மலையையொட்டிய பெரும்பாறை யொன்று சாய்ந்தாற் போலிருந்தது, அந்த ஒரு பாறையை ஆயிரக்கணக்கான பூத கணங்கள் ஒன்று கூடி சிறிதும் ஓசையன்றியே ஹஸ்ரத் அவர்கள் மீது தள்ளிவிட்டன.

அப்பாறை தம்மீது சாயப்போகிறது என்ற இரகசியம் ஹஸ்ரத் அவர்களுக்கு அவர்களின் இரகசிய சக்தியின் ஆதரவில் தெரிந்து விட்டதும் அவர்கள் அதே நிமிஷம் எழுந்து நின்று மலைமேல் பலமாய் தம் கால்களை ஊன்றி தமது ஒரே கையின் பலத்தால் அதை சாயாது தேக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் மீது தள்ளப்பட்ட பாறையானது நாளது வரையிலும் அதனை தேக்கப்பட்ட அளவிலேயே யாதொரு முட்டுக் காலன்றியே இருந்து வருகிறது.

ஹஸ்ரத் அவர்கள் தம்பாதங்களை பலமாய் ஊன்றி நின்றபோது கல்லின்மேல் உண்டான பதிவு அடையாளமும், அதேபோல், பாறையின் மீது ஏற்பட்ட கையின் பதிவு அடையாளமும் இன்றும் தென்பட்டு வருகின்றன. மலை உச்சிக்குச் செல்லும் முஸ்லிம்களுக்கிடை பல வாலிபர்கள் அங்கு போய் அதை தரிசித்து பாத்திஹா ஓதியும் வருகிறார்கள்.

பூதகணங்கள் யாவும் ஒன்றுகூடி, தம்மீது பாறையைத் தள்ளி விட்ட விஷயத்தில், ஹஜ்ரத் நத்ஹர் வலிக்கு சகிக்கொண்ணாத கோபம் உண்டாயிற்று. அதன் நிமித்தம் ஹஸரத் அவர்கள், தம் கோபப்பார்வையைக் கொண்டு, அவைகளை கவனிக்கவே அவையாவும் எரிந்து சாம்பலாகி விட்டன. (தொடரும்.)


தமிழில் இதுகாறும் வெளிவராத

## முஸ்லிம் அத்வைத மூலமொழி

இது அறபி, பார்ஸி பாஷைகளி லிருந்து நெல்லிக்குப்பம் மௌல்வி முஹம்மது அப்துல் றஹ்மான் ஸாஹிபவர்கள் தமிழில் உரை படுத்தப்பட்ட அருமையான இஸ்லாமிய அத்துவைத நூல்.

இதில் இஸ்லாமிய மூல மந்திரமாகிய "லாஇலாஹ இல்லல்லாஹு" என்னும் கலிமாவின் பொருளை, உள்ளது உள்ளபடி விளக்கிக்காட்டி அல்லாஹு தஆலா சர்வமும் தானாயிருக்கிறான் என்ற சத்தியத்தை நிலைநாட்டி, அதற்கு ஆதாரமாக ஆயத்துகளும் ஹதீதுகளுமாகிய சுருதிப் பிரமாணங்களையும் எடுத்துத் தீட்டி யிருக்கிறார். அத்துவைதமே தெரியாத சாமாணிய படிப்பாளிகள் கூட இதை வாசிக்கத் தொடங்கினால் இதன் உண்மைதா னென்ன வென்று தெரிந்து கொள்வர்.

இந்நூலுடன் "துஹ்பத்துல் முர்ஸலா" என்கிற ஓர் அத்வைத நூலும் "இந்துமத வேதாந்தப்பகுதி" என்ற ஓர் நூலும் ஆக மூன்றும் சேர்த்து ஒரே பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—12—0

கிடைக்குமிடம்:-

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# " தர்மம் "

(எம். கே. ஏ. எஸ். அஹ்மத்மீரு, சீருடைய புரம்.)

தர்மம் என்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக்கப் பட்டிருக்கிறது; தர்மம் கொடுப்பதற்கு அவனிடம் பொருள் இல்லையாயின்—அவன் தன்னுடைய கையைக் கொண்டு வேலை செய்து தனக்கு இலாபமும் சம்பாதித்து பிறகு தர்மமும் செய்ய வேண்டும். அவ்வாறுழைத்தும், அவன் பால் ஒன்றுமில்லையேல், சங்கடத்துள்ளே சிக்கி தேவையை நாடும் ஒருவனுக்கு அத்தேவையை பூர்த்தி செய்து வைக்க வேண்டும். அவ்வாறும் அவனால் செய்ய வியலாது போய் விடின்—நல்லவைகளைச் செய்து கொண்டு தீயவைகளைச் செய்யாதிருப்பதே (சிறந்த) தர்மமாகும்—என நவின்றுள்ளார்கள் நமது நாயகம் (ஸல்) அவர்களும்;

என்னே! தர்மத்தின் தாத்பரியம் எவ்வளவு அழகாக அமையப் பெற்றிருக்கிறது பாருங்கள்!

இன்றைய நிலையிலே—தர்மம் என்ற முறையிலே, ஆண்டவனை அரை நிமிடங்கூட அகத்தில் எண்ணாமல், ஆயிரமாயிரம் அநீதிகளை அஞ்சாமல் செய்து—அதிக பொருளீட்டி, அற்புதமான அடுக்கு மாளிகைகள் அமைத்து,—அதிலே அழகாக அமர்ந்து கொண்டு வள்ளல்—கொடையாளி, என்ற சிறப்புப் பெயரை தமதாக்கிக்கொள்ள விழைந்து விளம்பரத்துக்காக பணத்தைப் பல ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்கும் புண்ணியாத்மாக்களைத் தான் இவ்வவனியிலே மலிந்து காணக்கிடக்கிறதேயன்றி,—ஒரு ஏழை அவனது வாண்ட வாழ்க்கையையே வளம்பெறச்செய்து விடக்கூடிய ஒரு சிறு உதவியை நாடுகிறானென்றால் அது செய்ய விரும்புபவர்—முன்வருபவர் யாருமில்லை; எனவே ஒரு ஏழையின் தேவையை பூர்த்தி செய்தலே தலை சிறந்த தர்மம் என இஸ்லாமும் இயம்பி விட்டிருக்கிறது.

இது தவிர்த்து: ஆண்டவனுக்குப் பொருந்தாத 'ஹராமான' வழியிலே பொருள் திரட்டி தர்மத்தைச் செய்வது அதர்மமாகவே குறிப்பிடப்படுகிறது. உங்களுக்குத் தந்திருப்பவைகளிலிருந்து நல்லவைகளையே தர்மமாகக் கொடுங்கள் என்று திருமறையும் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. இக்கால மக்கள் பலர் பணக்காரர்கள் மட்டுந்தான் தர்மம் செய்ய முடியும் என்று தவறாக எண்ணுகின்றனர். மேற்கூறிய நாயக மொழியிலிருந்து மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொரு ஆத்மாவுக்கும் 'தர்மம்' என்பது கடமையென தெள்ளத் தெளிய தெரிய முடிகிறது.

உதாரணமாக மனிதனுக்கு துன்பந்தரக்கூடிய கல், முள், ஆணி, உடைந்த சிசா, போன்றவைகள் பாதைகளில் கிடப்பதை விட்டும் அகற்றுவது, எல்லாமக்களிடத்தும் இன்சொல் கொண்டு இயம்புவது பிராணிகளுக்குங்கூட உதவி புரிவதெல்லாம் தர்மந்தான். கடைசியாக மனிதன்—நல்லவை எவையோ அதைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையே ஆனாலும் தீயவைகளைச் செய்யாமலிருப்பதே தர்மத்தில் தலை சிறந்ததாகும் என்றே இயம்பிக் கொண்டிருப்பது இஸ்லாம். இங்ஙனமே புறநானூறாறும் புகன்றுள்ளாள் இவ்வாறு:—

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்—அதுதான்
எல்லாரும் உவப்பதுவு மன்றியும்
நல்லாற்றுப் படுஉம் நெறியுமார துவேயாம்.

---


## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹுப்பி ஸைய்யிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# ஹதீஸ் மன்றம்.

மௌலவி கே. எச். அப்துல் கரீம் (நூரிய்யி) பேரையூர்.

## 1-வது "உலக வாழ்க்கை"

நபிபெருமான் (ஸல்) ஒருநாள் ஈச்சம் பாயின்மீது படுத்து நித்திரை செய்தார்கள். துயிலைவிட்டும் நபிகள் எழுந்தவுடன் அவர்களது தூய சரீரத்தில் ஈச்சம் பாயால் அழுத்தப்பட்ட தடிப்புகள் காணப்பட்டன. நபியவர்களுக்கு அவ்வேளை பணியாளராய் இரு இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் நபிகளை நோக்கி, நபியே! அனுமதி கொடுப்பின் உயர்ந்த விரிப்பை தாங்களுக்காக தயார் செய றேன் எனவேண்டினார். உடனே நபியவர்கள் மஸ்வூதை நோக்கி மஸ்வூதே! நான் உலகை உயர்ந்த சுகங்கள் நிறைந்த உத்தியானவனமாக ஆக்கிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் உலகில் நான் ஒரு வழிப்போக்கனைப் போன்றே வாழ ஆசிக்கிறேன். உண்மையில் இவ்வகில வாழ்வாகிறது ஒரு பிரயாணி நிழலின் சுகத்தை அடைந்து கொள்வற்காக ஒரு மரத்தின் நிழலில் தங்கிவிட்டு பின்பு தனது லட்சிய இடத்திற்கு செல்கின்றானே அதேபோன்றது. எனவே நாமும் இப்பாரில் சிலநாட்கள் தங்கிவிட்டு நமது லட்சிய இடமான மறுமையை நோக்கி செல்லக்கூடியவர்களா யிருக்கிறோம், ஆதலின் நமது முக்கிய லக்ஷியப்பாதையான ஆகிரத்தின் நல்வாழ்விற்கு நல்ல சாதனங்களையும், நற்செய்கைகளையும் தங்கரியம் செய்யாது, அநித்திய வாழ்வான அகில வாழ்விற்கே சாதனங்களை தயார் செய்வதில் ஆழ்ந்துவிடக்கூடாது (ராவி இப்னு மஸ்வூது (ரலி) நூல் அஹ்மது திர்மதீ)

விரிஉரை:—நபிமணிகளின் இந்த நன் மொழி நம்மவர்கட்கு ஞானில வாழ்வில் நாம் அடையக்கூடிய நற்சுகம் ஒரு வழிப்போக்கன் களைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் நிழலில் தங்குகிறானே அதே போன்றது என்பதை வெள்ளிடைமலைபோல் எடுத்தியம்புகிறது, மேலும் அகில உலக வழிகாட்டி அண்ணல் நபி (ஸல்) அவர்களே அநித்திய உலகின் ஆடம்பரத்தையும், படோடாபத்தையும் ஆனந்த சுகத்தையும் விரும்பாது ஒரு முஸாபிரைப்போன்று வாழ ஆசித்திருக்கும்பொழுது நம்போன்ற பாவம் என்ற தடாகத்தில் சதாக்குளித்து நீராடிக்கொண்டிருக்கும் பாவிகள் பாரில் எவ்விதமாக வாழவேண்டுமென்பதை சிந்தனைக் கடலில் மூழ்கி சிந்தித்துணர்ந்து செயல்படும் வேலையில் ஈடுபட்டு பரலோக வாழ்க்கையை பரமானந்தம் நிறைந்த நல் வாழ்க்கையாக ஆக்கிக்கொள்ள ஒவ்வொரு இஸ்லாமியனும் முயல வேண்டும். அன்றி ஞானிலமே நல் வாழ்வின் மேடை, அகிலமே ஆனந்தத்தின் பாசறை, உலகமே உல்லாசவாழ்வின் உறைவிடம்,

இவ்வகிலமே இன்பத்தின் ஊற்று, என நினைத்து அநித்திய அகில வாழ்விற்காக அநேக சாதனங்களையும் சுகபோக சாமான்களையும் தேடுவதிலேயே முனைந்து மறுமையை மறந்த மதியீனர்களாய் திகழ்ந்து விடாது, இருலோகத்திலும் இறைவனின் இணையற்ற ஜெய சீலர்களாய்த் திகழ முயலவேண்டும். இதுவே எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் நவின்ற நன்மொழியின் கருத்துமாகும்.

அறிந்துகொள்! அறிந்துகொள்!!

அல்லாஹுவின் (திக்ரு) ஞாபகம் இன்னும் அதைத்தொடர்ந்து ...க்க கலைஞன், மார்க்க கலை பயிலும் மாணவன், முதலியவைகளைத் ...னிலம், மானிலத்துள்ள மற்ற சகல வஸ்த்துக்களும் சபிக்கப் ...தாயிருக்கும் அதாவது அல்லாஹு தஆலாவின் அருள் வர்ஷிக்கப்படுவதற்கு அருகதையற்றதாயிருக்கும். (ராவி—அபூஹுரைரா (ரலி) நூல்—திர்மதீ இப்னுமாஜா)

விரிஉரை:—மனிதன் மானில வாழ்வில் தன்னை சிங்காரித்து கொள்வதற்காக இறைவனை மறந்து பலவித அநாகரீகச் செய்கைகளைச் செய்ய முயலுகிறான். ஆனால் இந்த (துன்யா) உலகத்திற்கு இறைவனிடம் ஏதாவது நன்மதிப்பு இருக்கிறதாவென்றால், அதுதான் இல்லவே இல்லை. எவ்வஸ்த்துக்கள் அல்லாஹுவின் ஞாபகத்தைபற்றியும் அவனின் சன்மார்க்கத்தைப்பற்றியும் தொடர்புள்ளதாக விருக்கின்றதோ அவைகள்தான் அல்லாஹுவிடத்து நன்மதிப்புள்ளதாகவும் அவனின் நல்லருள் சொரியப்படுவதற்கு மிகமிக லாயிக்கானதுமாக விருக்கிறது. ஆதலின், எவ்வஸ்த்துக்கள் நாயனின் சிந்தனையைவிட்டும் நன்மார்க்கப் பற்றைவிட்டும் மறக்கடிக்க வைக்கின்றதோ அதற்குப் பெயர்தான் (துன்யா) "உலகம்" என்று கூறப்படும். இவ்விதமான கர்மங்களின்மீது இறைவனின் இன்னருள் அரவே சொரியப்பட மாட்டாது. மார்க்க கலைவளர்வதற்கு எவர் முயற்சிக்கிறாரோ அன்னவர் மீதும் குறிப்பாக அல்லாஹுவின் நல்லருள் சொரியப்படும்.

187031

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# முரீது உபதேசம்

இதில் அடங்கி உள்ள விஷயங்களாவன:—உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்—முரூதத் விபரம், முரீத் தென்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்கவேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோத வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர்சேர் செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீ சாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசார முறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசாரமுறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் சாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பா யுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சீலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபிபெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷாத்துகள், நப்ஸும் ஆத்துமாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துவா, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜனமடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# தவத்துது என்ற வெள்ளாட்டி

## மஃலா

பக்தாத் என்னும் தேசத்தில் தாருஸ்ஸலாம் என்னும் பட்டணத்தில் ஒரு பெரிய பணக்கார வியாபாரியின் மகனான பதருஸ்ஸமான் என்பவர், தனது காலஞ் சென்ற தகப்பனாரின் நல்லுபதேச ஓசியத்தை மறந்து, பாவங்கள், அழிச்சாட்டியங்களில் துணிந்து வீண் செலவுகள் செய்து, ஆஸ்தி முழுவதையும் இழந்துவிட்டார். அவரிடம் தவத்துது என்ற வெள் டியைத் தவிர யாதொரு வஸ்துவும் இல்லாமலாகி ட்டது. அச்சமயத்தில் அவ்வெள்ளாட்டி, தன்னை அவ்வூர் பாதுஷாவான ஹாரூன் ரஷீதுயிடம் விற்று தனக்குரிய கிரயம் பதினாயிரம் தங்கக்காசு வாங்கிக்கொள்ளுமாறு, தனது நாயகன் பதருஸ்ஸமானிடம் சொன்னாள். அதன்படி பதருஸ்ஸமான் பாதுஷாவிடம் வெள்ளாட்டியைக் கொண்டுபோய், பதினாயிரம் தங்கக் காசு கேட்க, பாதுஷா ஒரு சாதாரண வெள்ளாட்டிக்கு பதினாயிரம் தங்கக்காசு கொடுக்க இயலாதென்றார். அதன் பேரில், இவ்வெள்ளாட்டி சாதாரண மானவளல்ல வென்றும் மார்க்க அறிவுகளில் மிக தேர்ந்தவளென்றும், சந்தேகப்படில் சோதிக்குமாறு பதருஸ்ஸமான் சொன்னார். அப்பொழுது பாதுஷா, தனது சபையிலுள்ள அறிவுள்ள உலமாக்களைப் பார்த்து, அவ்வெள்ளாட்டியிடம் மார்க்க அறிவுகள் விஷயமாக கேள்வி போட்டு சோதிக்குமாறு உத்திரவிட்டார்.

இந்த கிதாபு, அமீருல் முஃமினீன் சுல்தான் ஹாரூன் ரஷீது றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் முன்னிலையில் உலமாக்களுக்கும் தவத்துதென்ற வெள்ளாட்டிக்கும் நடந்த சுவால், ஜவாபாகிய ஹதீது கிஸ்ஸாவைப் பொதிந்துள்ளது. யாவரும் இந்த கிஸ்ஸா ஹதீது முற்றும் படித்து அதன்படி அமல் செய்து வந்தால், அவர்களுக்கு மிகுந்த அறிவுகளும் தவாபுகளும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் ஒவ்வொரு முஸ்லிமும் இக்கிதாபை வாங்கி படித்து பிரயோஜன மடைவீர்களாக. இதன் விலை தமிழில் ரூ. 2–0–0

ஷை அரபுத் தமிழ் விலை ரூ. 2–8–0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.